# கலையோசை




## புலத்தில் மலர்ந்த இசைக்கோலம்

கலையின் உருவே தமிழ்த்தாயே
பிறேமன் தமிழ்க்கலை மன்றத்தின்
காணிக்கை இதுவே.

# கலையோசை

பிறேமன் தமிழ்க்கலை மன்றத்தின்
கலை, இலக்கிய காலாண்டுச் சஞ்சிகை

கலையோசையில் வெளிவரும் ஆக்கங்களுக்கு ஆக்கதாரர்களே பொறுப்பு. ஆக்கங்களைச் சுருக்கவோ, அவசியம் ஏற்படின் திருத்தவோ ஆசிரியருக்கு உரிமையுண்டு.

கலை 4 ஓசை 6
திருவள்ளுவராண்டு 2031
தை, மாசி, பங்குனி 2000

நாமும் நமக்கென்று
நலியாக் கலையுடையோம்.

# கலையோசை

கலை 4 ஓசை 6


*வடிவமைப்பும்*
*கணணிப் பதிப்பும்*

*இராஜன் முருகவேல்*
*இ. த. இராஜன்*
*இரா. மோகனதாஸ்*

*வெளியீடு*

**பிறேமன்**
**தமிழ்க்கலை மன்றம்**

Tamilischer Kultur Verein
Bremen.e.V
Postfach 660448
28244 Bremen
Tel.& Fax:0421-579 6195
E-Mail: kalaiosai@tamil.com

**இணை ஆசிரியர்**
**இராஜன் முருகவேல்**

**ஆசிரியர்**
***தமிழ்மணி***
**நாச்சிமார்கோயிலடி இராஜன்**


# பொருளடக்கம்


◆ *புலத்தில் புலர்ந்த புதிய இசைக்கோலம்*
மணிதாசன் .................................... 5

◆ *யாகாவாராயினும் நாகாக்க!*
இராஜன் முருகவேல் .................... 7

◆ *கலைகளும் உலகமும்*
அழலாடி .................................... 18

◆ *கனவின் மீதி...*
அனுபவன் .................................... 22

◆ *எனது நாடகப் பார்வை!*
ஈழக்கூத்தருடன்
சுபமங்களாவின் நேர்காணல் ............. 23

◆ *நாயன்மார் பதில்கள்* ........................ 37

◆ *குடும்பம் ஒரு கதம்பம்*
சோழியான் .................................... 39

◆ *பாவரங்கு*
விழித்திருந்தால் கிட்டிடுமோ
விடிய ஒரு கைவிசேசம்?
– பீற்றர் குலம் .................... 55
ஓயாத அலைகள்!
– கைலாயன் .................... 56

◆ *பிறேமன் தமிழ்க்கலை மன்றத்தின்*
*ஏழாவது ஆண்டு நிறைவுக் கலைவிழா*
*–ஒரு பார்வை.*
இரசிகன் .................................... 59

# மலர்கள் மாலையாகட்டும்!

மணம் வீசும் மலராக இருந்தாலும் அது தனியாக இருப்பதைவிட மாலையாகத் தொடுக்கப்பட்ட பின் அதன் அழகே தனி.

ஒரு கை ஓசை இல்லாமல் பல கைகள் இணையும்போது ஓசை உரத்து ஒலிக்கும்தானே! இதை எங்களில் எத்தனை பேர் எண்ணிப் பார்க்கிறோம்.

நான் என்பது தமிழன் என்றும், நாம் என்பது தமிழினம் என்றும் எண்ணும் நிலைமாறி தனித்தனியாக நானும் நாமும் நின்று புலம்பெயர் நாடுகளில் எங்கள் கலை இலக்கிய விளையாட்டு துறைகள் நான்கைந்து வருடங்களுக்கு முன்பிருந்த வளர்ச்சியில் இருந்து பின்னடைவுக்குத் தள்ளப்பட்டி ருக்கின்றன.

கலை, இலக்கிய, விளையாட்டு முன்னெடுப்புகள் அனைத்துமே கூட்டு முயற்சியாக இருந்தால்மட்டுமே வளர்ச்சி அடையும். கூட்டுமுயற்சி அற்ற தனிமனிதத்திறமைக்கு முன்னிடம் அளிக்கும் மனப்போக்குகள்- மேன்மேலும் பின்னடைவையே தந்து, காலப்போக்கில் இத்துறைகளில் சுய நலப்போக்குடையோர் காணாமற்போய்விடும் நிலையே உருவாகும்.

உதிரிகளாயிருந்து, தங்கள் திறமைகளில் தாம்மட்டும் திருப்தி அடையும் நிலையை மாற்றி; பொது அமைப்புகளில் இணைந்து- தங்கள் திறமையை எம் இனத்தின் வளர்ச்சிக்கு உரமாக இடுவதன்மூலம் தாமும் வளரலாம் என்ற உயர்நோக்கு கலைஞர்களுக்கு மிகமிக அவசியமானதா கின்றது.

இத்துறைகளில் ஈடுபாடற்றவர்கள் வெறுமனே பார்வையாளராக இருந்து மனம்போன போக்கில் வசைபாடுதலைத் தவிர்த்து, தமக்கு ஆர்வம் இல்லாவிடினும், இத்துறைகள் சார்ந்த பொது அமைப்புகள் வளர உதவி செய்வது என்பது... கண்டம் கடந்து வாழும் நமது இனம் அழியாமல் பாதுகாக்கின்ற பெரும்பணியில் தம்மையும் இணைத்துக் கொள்வதாய் அமையும்.

❐

- தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்ய வேண்டுமென ஆவல் கொண்ட இலகு தமிழ் கவிதை முன்னோடி பாரதியின் கனவு நனவாகும் காலமிது.
- மாற்றார் மொழியையும் மாண்புடன் மதிக்கும் ரஷ்ய மண்ணிலிருந்து ருஷ்யத் தமிழ் மாணவர்களின் முகிழ்ப்பாக அதிர்கின்றது 'இதய ஒலி'!
- 'இதய ஒலி'யை கலையோசையின் வாசகர்களுக்கு அறிமுகம் செய்வதில் கலையோசை பூரிப்படைகிறது.

## இதய ஒலி

P.O.Box – 48,
Smolensk, 214019,
Russia.

- தென் கிழக்காசிய நாடுகளில் அதிகமான தமிழர்கள் வாழும் செழுமைமிகு மலேசிய மண்ணில் செந்தமிழை அருவியாக் கி தமிழர் நெஞ்சில் பரவவிடும் கவிதை இதழ் 'அருவி'!

அருவியாய் செந்தமிழை
செழுமைமிகு மலேசிய மண்ணில்
விரவியே தமிழர் நெஞ்சில்
பாயவைக்கும் கவிதையிதழ்- அருவிதன்னை
வருக வருக வளமுடன்
தமிழ் வளர உலகெலாம்
பரவி வாழும் தமிழர் கைகளில்
தவழ்க தவழ்கவென
கலையோசை கனிவுடன்
வாழ்த்துகிறது!

## அருவி

S.Arunasalam,
197, Taman Megah, 72100 Bateu, N.S.D.K.,
Malaysia.

# புலத்தில் புலர்ந்த இசைக்கோலம்!

-அனுபவன்

இனவாதச் சிங்கள அரசுகளின் திட்டமிட்ட ஒடுக்குமுறையும் இன அழிப்பும், உலகப் பந்தின் உடலெங்கும் வீசி எறியப்பட்ட பந்துகளாய் தமிழீழ மக்கள் சிதறுண்டு வாழ்கின்ற நிலையை உரு வாக்கின.

பலவீனங்களை எம்மவர் பலமாக்கிக் கொண்டனர். ஆம்... தீமை யிலே விளைந்தது நன்மை! பரந்து விரிந்த ஜேர்மனியில், மாநிலத் துக்கு மாநிலம் அகதிகள் செல்லத் தடை. குண்டுச் சட்டிக்குள்ளே குதிரை ஓட்டும்படி ஜேர்மனியின் சட்டம்! உறவுகள், நண்பர்களைக் காணவேண்டும் என்ற ஆவலுக்குக்கூட வெளிநாட்டவர் அலுவ லகத்தில் அனுமதி பெறவேண்டிய நிலையிலேதான் பத்து ஆண்டு களுக்கு முன்னர் எம்மில் பலர் வாழ்ந்து கொண்டிருந்தோம்.

ஜேர்மனியின் தனி மாநிலங்கள் மூன்றிலே ஒன்று பிறேமன். பிறேமனிலே ஏறத்தாழ ஆயிரம் பேர்வரை குழந்தைகள் உட்பட வாழ்ந்தோம். எங்கள் குழந்தைகளுக்கு நாம் தமிழர் என்பதை உணர்த்த (நாமும் தமிழர் என்பதை மறந்துவிடாமலிருக்க) வேண்டி ய அவசியம் எம்மைச் சார்ந்த ஒரு பாரிய பொறுப்பாக இருந்தது. இந்தச் சமூகத்தேவையை முன்னெடுக்க கலை கலாச்சார வெளிப் பாடுகள் முதன்மைபெற்றவை என உணரப்பட்டு 1992ல் உருவாகிய பிறேமன் தமிழ்க்கலை மன்றத்தின் அறிமுக விழாவில் நிகழ்ந்த மெல்லிசை நிகழ்ச்சியிலே மேடைப் பாடகர்களாக அறிமுகம் செய்யப்பட்ட பத்மநாதன் யோகநாதன் சகோதரர்கள் ஏழே மாதங்களில் கலைநிலா இசைக்குழுவை உருவாக்கினார்கள். 16.04.93ல் பிறேமன் தமிழ்க்கலை மன்றம் நடாத்திய சித்திரைக் கலைவிழாவில் கலைநிலா இசைக்குழுவின் அரங்கேற்றம்— அதைத் தொடர்ந்து, பூவரசு இனிய தமிழேட்டின் மூன்றாவது ஆண்டு விழாவில் இந்துமகேஷ் அவர்களும் செ.யோகநாதனும் எழுதிய பாடல்களுக்கு செ.பத்மநாதன் மெட்டமைக்க ஜோன்சன் சகோதரர்களின் வழிகாட்ட லில் இசையமைத்து, நம்மவர் இசை என்ற புதியதொரு முகம்

கலைநிலாவின் வளர்ச்சிக்கோர் மைல் கல்லானது. தேடல், தேடல்... அதுதான் அதுதான் 'ஆனந்த ராகங்கள்– 2000' 25 பங்குனி 2000இல் 'தேடலுள்ள கலைகள் கால காலங்கள் வாழும்' என்பதை நிரூபித்தது கலைநிலா. ஆம்! பத்மநாதன் எழுதிய பதினொரு பாடல்களும் சகோதரன் யோகநாதன் எழுதிய ஒரு பாடலுமாக பன்னிரண்டு பாடல் களுக்கு பத்மநாதன் மெட்டமைத்து இசையமைக்க, பதினெட்டே வயதான சுதன் நடராஜாவின் சுரத்தட்டு சுருதி இசை மீட்க, முன்னாள் இலங்கை வானொலி தாள வாத்தியக் கலைஞர் ராஜ்குமார் அவர்களின் விரல்கள் தபேலாவிலும், மிருதங்கத்திலும் நடனமாட, ஜோன்சன் ஜெரால்ட் சகோதரர்களின் ஹிற்றார் சுவையூட்ட, ஹம்பேர்க் மதனி, டென்மார்க் தமிழினி, பிறேமன் கலைநிலாவின் நடராஜா, பத்மநாதன்– யோகநாதன்– ஞானசெல்வம் ஆகிய பாடகர்களின் இனி ய குரல்கள் இணைய உருவானது 'ஆனந்த ராகங்கள் 2000'.

தாயை, தமிழை, தாயகத்தின் துயரை, காதலை, கிராமியத்தை எண்ண வைக்கும் பாடல்கள். இவற்றோடு சுதன் நடராஜாவின் இசைப்போரும் இணைந்து புலர்ந்தது புலத்திலோர் இசைக்கோலம்.

வெளியீட்டு விழாவை சகோதர இசைக்குழுவான சுப்பர் பிரின்ஸ் கலைஞர்களும் பங்கேற்றுச் சிறப்பித்தனர். இசைத்தட்டில் அடங்கிய பாடல்கள் அனைத்தையுமே வெளியீட்டு விழாவில் பாடுவார்கள் என எதிர்பார்த்த இரசிகர்களுக்கு இசைத்தட்டில் இருந்து மூன்று பாடல் கள் மட்டுமே கிடைத்தன. மேடையிலே பாடிய ஏனைய பாடல்கள் பலவும் திரைப்படப் பாடல்களாகவே அமைந்தன. நீண்ட கால முயற் சியின் பின் வெளியிடப்பட்ட இசைத்தட்டிலுள்ள பாடல்களை மேடை யில் பாடியிருக்கலாம் என இரசிகர்கள் பேசிக்கொண்டனர். இசைத் தட்டிலுள்ள பாடல்களுக்கு அபிநய நடனங்களும் தனிநடிப்பும் சிறுவர் களால் சிறப்பாக வழங்கப்பட்டமை இசைத்தட்டின் தரத்தை இரசிகர் களை நுகரச்செய்தது.

ஜேர்மனியிலே ஒரு இசைக்குழுவினால் தனித்து வெளியிடப் பட்ட இசைத்தட்டு என்ற பெருமையை 'ஆனந்த ராகங்கள் 2000' பெறுகிறது. வெளியீட்டுக்கு ஆதரவு கொடுத்த பெருமையை 'ரெமி றெக்கோட்ஸ்' நிறுவனம் பெறுகிறது.

'மண்' சஞ்சிகை பத்தாவது ஆண்டு நிறைவு சிறுகதைப் போட்டியில் (2000) முதலாவது இடத்தைப்பெற்ற சிறுகதை.

# யாகாவாராயினும் நாகாக்க!

-இராஜன் முருகவேல்

எவரெவரோ வந்து போகிறார்கள். என்னென்னவோ கதைக்கிறார்கள். சம்பந்தா சம்பந்தமில்லாமல் கதைக்கிறார்கள். பொருத்தமில்லாமல் அனுதாபப்படுகிறார்கள். வலிந்து ஆறுதல் கூறுகிறார்கள்.

அவசரமென்று உதவி கேட்கும்போது அலட்சியத்துடன் ஒதுங்கி நின்று வேடிக்கை பார்த்தவர்கள் எல்லாம் அழையா விருந்தாளிகளாக வந்து போகிறார்கள். 'ஏதாவது உதவி தேவையா?' என்ற பாவனையில் விசாரித்துச் செல்கிறார்கள்.

அவர்களது செய்கைகளையும் நடவடிக்கைகளையும் அரைகுறையாகவாவது அவதானிக்க முடிகிறது. வியப்பாக இருக்கிறது. அவர்களைப்பற்றி அவள் தனக்குள் போட்டுத் தீர்மானித்த முடிவுகள் யாவும் அங்கே தடுமாறி, அவர்களின் புதிய முகங்களைத் தரிசிக்க நேரும் விந்தைகள் யாவும் புதியனவாக இருக்கிறது. அதேநேரத்தில் வேதனையான வேடிக்கையாகவும் இருக்கிறது.

சத்தியநாதன் எப்போதும் இல்லாத புதுமையாய் கடந்த ஒரு கிழமையாக அவளையே சுற்றிச்சுற்றி வந்துகொண்டிருக்கிறான். அடிக்கடி அவளை நோக்குவதும் பெருமூச்சுவிடுவதுமாக வாடிச் சோர்ந்துபோய் அங்கே ஒரு மூலையில் போடப்பட்டுள்ள கதிரையில் அமர்ந்திருக்கும் சத்தியநாதனைப் பார்க்க மனதில் ஏதோ குடைந்தது. அந்தக் குடைதல் பழைய நினைவுகளைக் கிளறி குமுறலாக வெளிவர முற்பட்டது.

அவன் இந்த ஒரு கிழமையாக ஏன் இப்படி மாறிப் போ

னான்? மாறவேண்டிய நேரத்திலெல்லாம் தன்னை மாற்றிக் கொள்ளாமல், காலங்கடந்து இப்போது மாறுவதாலோ அல்லது துயரப்படுவதாலோ என்ன பிரயோசனம்?

இந்தத் திடீர் மாற்றத்துக்கு என்ன காரணம்? சுடலை ஞானமா? சுயநலமா? வாழ்வின் வசந்தங்களை முழுமையாகத் தெரிந்து கொள்ளாமல் கைதவறவிட்ட பரிதவிப்பா?

எண்ணங்கள் நெஞ்சகத்தில் உருண்டோடின.

வராதவர்களெல்லாம் வரும்போது, உதவாதவர்கள் எல்லாம் உதவி தேவையா என்றபோக்கில் உருகி நிற்கும் போது சத்தியநாதனும் தன்னை மாற்றத்துக்குள்ளாக்கி வேசம் போடுகிறானா?

நிசமோ? வேசமோ? இவையெல்லாம் தற்போது எதற்குத் தேவை? வாழும்போது இந்த மாற்றங்களும் ஆதரவுகளும் அனுதாபங்களும் எங்கே ஒளிந்துகொண்டன? வாடி உதிரப்போகும் நிலையில், அனுபவிப்பதை எல்லாம் அனுபவித்து, எதிர்கொண்ட பிரச்சினைகளுக்கெல்லாம் வளைந்து குழைந்து தனித்துவத்தை இழந்து ஏனையவர்களின் திருப்திக்காகத் தினமும் உழைத்து, அதனையே வாழ்க்கையாய் பெயர்கூறித் தற்போது களைத்து விழுந்து முடிவின் முழுவியளத்துக்காகக் காத்திருக்கும் வேளையில் இந்த ஆதரவுகளால், ஆறுதல்களால், சோகங்களால் என்ன பயன்?

கேட்க வேண்டும் போலிருந்தது. இயலவில்லை.

வாழ்வதற்காக நிதமும் புதுப் புதுத் தேடல்களுடன் ஓடியோடிச் சுழன்று சுற்றி, எல்லாவற்றிற்கும் ஒரு முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டுமென்ற நியதிக்குட்பட்டவளாய், அந்த ஜேர்மன் நாட்டின் நகரமொன்றின் வைத்தியசாலைக் கட்டிலொன்றில் படுத்தாகிவிட்டது.

இந்த நேரத்தில் எங்கிருந்தோ புற்றீசல்கள்போல் எத்தனையோ தமிழ் முகங்கள் உறவுகள் உரித்துக்கள் பழகியவர்கள் என்ற ரீதியில் வந்து கட்டிலைச் சுற்றிக் குனிந்துநின்று கதைகதையாய்க் கதைக்கிறார்கள். அவள் சாதாரணமாகச் செய்த செயற்பாடுகளை எல்லாம் அருமைபெருமையாக மனம்போன போக்கில் கதைத்து, அவளை எங்கோ உச்சத்தில் தூக்கிவைத்துக் கொண்டாட வி

ழைகிறார்கள்.

அத்தனையும் எங்கோ வெகுதொலைவில் இருந்து ஒலிப்பதுபோலக் கேட்கிறது.

அவற்றைக் கேட்க அவளுக்கே சிரிப்பாக இருந்தது. மறுகணம் சிரிப்பு சீற்றமானது.

ஏன் இப்படிக் கதைக்கிறார்கள்? பயணம் அனுப்புவதற்கு முன்னால் வார்த்தைகளால் விருந்து வைக்கிறார்களா? அவளைப்போல் அவர்களும் அதே மாதிரியான கட்டிலில் தேடப்போகும் முடிவின் பயத்தால் ஏற்பட்ட பாதிப்புத் தரும் கதைகளா இவை? கதைகளால் பாவமன்னிப்புத் தேடுகிறார்களா? அந்தப் பாவமன்னிப்புக் கோரல்களுக்கு அவளா பாத்திரவாதி?!

அதேபோல அவன்.... அவளின் அவன் அந்தக் கதைகளை எப்படிச் செவியேற்கிறான்... அதுவும் பொறுமையாக... அவனால் முடிகிறதா... அந்தச் சகிப்புத்தன்மையைப் பார்க்கவேண்டும் போலிருந்தது.

பாறாங்கற்களாகக் கனக்கும் விழி மடல்களைத் திறந்து அவனைப் பார்ப்பதற்கு முயற்சித்தாள். முடியவில்லை.

சகிப்புத்தன்மை அவனுக்கு... அவளின் சத்தியநாதனுக்கு ஒத்துவராதது என்பது அவளது அனுபவம். அவளைப் பொறுத்த வரையில், அவனுக்கு எதற்குமே பொறுமை கிடையாது. எடுத்ததற்கெல்லாம் 'வெடுக், வெடுக்' என்று எகிறிப் பாயும் குணம்....

எதற்கெடுத்தாலும் பொறுமையின்றிக் கத்துவான். ஏதாவது காரணம் சொன்னால் கோபம் வந்துவிடும். கோபத்தின் உச்சிக்குப்போய் வார்த்தைகளாக வெளிக்கிளம்பும் சுடுசொற்களின் தாக்குதல்களால் ஏற்பட்ட மன ரணங்களுக்குள் உடல் குன்றி, உள்ளம் நொந்து, அவைகள் எல்லாமே தழும்புகளாய்,அவைகளால் தோன்றிய வலிகள் எல்லாம் வாழ்வே இதுதான் என்ற தோரணையில் அவளை உருக்குலைக்க, அவனது உணர்வுகளுக்கும் மூச்சுக்காற்றுக்கும்கூட வளைந்து கொடுப்பவளாய் அவள் பழகிவிட்டாள்.

'எது அவனுக்குப் பிடிக்காது.... எவை அவனின் கண்களில் தென்பட்டுவிடக் கூடாது' என்பதை எல்லாம் அனுபவித்து, அவற்றுக்கேற்பத் தனது தனித்தன்மைகளை, சுதந்திரமான உணர்வுகளை எல்லாம் உருமாற்றி, சுய உணர்வற்ற மானுடப் பிராணியாய் தன்னை மாற்றி

வாழப் பழகி, அதே வாழ்க் கையாகி இவ்வளவு காலமாய் அவனுக்காக வாழ்ந்துவிட் டாள்.

அவனது தேவைகளுக் காக, திருப்திக்காக தினமும் மனைவி என்ற வேசத்தில் நடித்து ஓய்ந்து கட்டிலில் விழுந்துவிட்டாள். இந்த வே சங்களுக்கும் போலிகளுக்கும் முடிவு காணப்போகும்வேளை யில், கடந்த ஒரு கிழமையாய் அவளைச் சுற்றியவாறு சத்தி யநாதன் என்றுமில்லாத புதின மாய்.

அன்று நண்பன் ஒருவ னின் திருமண வைபவத்துக் குச் செல்ல ஆயத்தமாகிக் கொண்டிருந்தார்கள்.

"தேத்தண்ணி எங்கை?"

துங்கி எழுந்து முகம் கழுவாத குறையாகத் தனது அதிகாரத்தை ஆரம்பித்துவிட் டான்.

மூத்தமகன் மதனுக்கு உடைகளை அணிவித்துக் கொண்டிருந்தவள்,அதை அப் படியே விட்டுவிட்டு பரபரப் புடன் சமையலறையினுள் சென்று தேனீரைக் கொண்டு வந்தாள்.

"தேத்தண்ணி கொண்டு வாறத்துக்கு இவளவு நேரம்... உனக்கு ஒண்டுக்கும் விடியாது.." என்றவாறு தேனீரை அருந்தி ஒரு 'சிகரட்'டை உருவி வாயில் பொருத்தியவன், அடுத்த உத்தர வுக்குத் தயாரானான்.

"என்ரை உடுப்புகள் எங்கை...."

"கோல்ட் செயின்' மணிக்கூட் டைக் கொண்டு வா... எல்லாம் சொல்லிக் கொண்டிருக்க வே ணும்..."

அவள் மூச்சுவிடுவதற்குக்கூட அவகாசமின்றி அவனதும், பிள் ளைகளினதும் தேவைகளுக்காக இயங்கிக் கொண்டிருந்தாள்.

அவன் இருந்த இடத்தில் தனது தேவைகளை நிறைவேற்றித் திருமண வைபத்துக்குச் செல்ல ஆயத்தமாகிவிட்டான்.

"இன்னும் வெளிக்கிடேல்லை யே.... ஒரு அலுவலையும் நேர வழிக்கு ஒழுங்காய்ச் செய்யத் தெரியாது" என்று சத்தியநாதனின் குரல் உஷ்ணமாக வெளிவந்தது.

அவனது அந்த நேரத்துத் தேவைகள் நிறைவேறிவிட்டன. இனி அவள் எப்பாடு பட்டாலும் பரவாயில்லை, அதிகாரத்தால் எதையும் அவளிடமிருந்து பெற் றுக் கொள்ளலாம் என்ற போக்கு அவனுக்கு.

"இதுகள் ரண்டையும் வெ

ளிக்கிடுத்தி, நானும் வெளிக்கிட வேண்டாமே... சுடுது மடியைப் பிடியெண்டால் முடியுமே..." என்று முணகினாள்.

"ம்.... உந்தக் கதைக்கொண்டும் குறைச்சலில்லை.... எப்ப பார்த்தாலும் வாய்க்கு வாய் காட்டிப் போடுவாய்... வாற தெண்டால் வாற வழியைப் பார்... நீ வெளிக்கிடுற வேகத்தைப் பார்த்தால் சாப்பாட்டுக்கும் போகமாட்டம்போலை..."

அவனுக்குத் தேனீர் கொடுத்து, அவர்களுக்கு எல்லாம் உடைகளை எடுத்து வைத்து, பிள்ளைகள் மதனுக்கும் சுதனுக்கும் உணவூட்டி, அவர்களுக்கு உடையணிந்து, அவளும் அலங்காரம் செய்வதற்குள் சத்தியநாதன் பொறுமையிழந்தவனாய் உருத்திரமூர்த்தியாகி, அவளைச் சுடுசொற்களால் வதைக்கத் தொடங்கி விடுவான்.

இது இந்த திருமண வைபவத்துக்குச் செல்வதில்மட்டுமல்ல. பிறந்தநாள் என்றாலும் சரி, அவன் வேலைக்குச் செல்வதானாலும் சரி, எங்கு செல்ல நேர்ந்தாலும் இந்த உரையாடல்கள் வழமையாகி அவளைப் பாதிப்பதே வாழ்வாகி விட்டது.

அவளின் கஸ்டங்களை, உணர்வுகளைப் புரிந்துகொள்ளாமல், கோபத்தாலும் அதிகாரத்தாலும் அவளை வதைத்துத் தனது தேவைகளை நிறைவேற்றுவதே வாழ்க்கை என்று பெரும் சுமையை அவள்மீது திணித்து விட்டான்.

இந்தத் திணிப்புகளுக்குள் திக்கித் திணறி இரண்டாயிரத்து இருபதாம் ஆண்டுவரை வாழ்வதாகப் பெயர் சொல்லி, தனது இறுதிப் பயணத்துக்கு ஆயத்தமாகிவிட்டாள் நந்தினி.

ஜேர்மனிக்கு வந்து ஏறக்குறைய முப்பது ஆண்டுகள்.

'ஜேர்மன் மாப்பிளை. நல்ல விசாக்காரன். கைநிறையச் சம்பாதிக்கிறான். அவன் தனியே வசிப்பதால் மாமியார் மைத்துனிமார் பிரச்சினைகள் இல்லை' என்ற களிப்புடன் நந்தினியைச் சத்தியநாதனுக்கு மனைவியாக்க அனுப்பி வைத்தனர் பெற்றோர்.

அவளும் வெளிநாடு, சுகமாயிருக்கும் என்ற எண்ணத்துடன்தான் ஆயிரத்துத் தொயிரத்துத் தொண்ணூறாம் ஆண்டு ஜேர்மனிக்கு வந்தாள்.

கைக்கு எட்டிய தூரத்தில் தொலைக்காட்சிப் பெட்டியில்

தான் உலகத்தைப் பார்க்க முடிந்தது. கட்டிடங்கள் காடுகளாகி, சிறையாகி தனிமை கொடுமையாக வாட்டியது. அவசரத்துக்கு உதவ இனசனமென்று எவருமே இல்லாத வெறுமை பயமுறுத்தியது.

மொழியைப் படிக்கலாமென்றால் அதற்கும் தடை. திருமணமாகி ஒரு வருடத்துக்குள் குழந்தை பெற்றால் தானாம் தான் ஆண்மகன் என்று பெருமை காட்டலாமாம். 'முதலிலை குழந்தை... அதுக்குப் பிறகு 'டொச்' படிக்கிறதைப்பற்றி யோசிக்கலாம்...' என்று தட்டிக் கழித்துவிட்டான். ஆனால் தனது நண்பர்களுக்கு முன்னால், 'ஜேர்மனிக்கு வந்து எவளவு காலம்.... இன்னும் டொச் தெரியாது.... எல்லாத்துக்கும் நான்தான் போக வேணும்...' என்று ஒரு பிரலாபம்.

எடுத்ததற்கெல்லாம் 'உனக்கு ஒண்டும் தெரியாது' என்று அவளை மட்டம் தட்டுவதே அவனது பழக்கமாகி, அதைக் கேட்பதே அவளது வழக்கமாகி, அவளது பிள்ளைகளைப் பொறுத்தவரையிலும் அவள் ஒண்டும் தெரியாதவளானதுதான் கண்ட மிச்சம்.

"மதன்! இண்டைக்கு என்ன படிச்சனீ..."

"சொன்னால்போலை உங்களுக்கு விளங்கப் போகுதே..."

திருப்பிக் கேட்டான் மதன்.

"அம்மாவுக்கு ஒண்டும் தெரியாது"

மதனுடன் சேர்ந்து சுதனும் சிரிக்கும்போது அவளுக்கு நெஞ்சில் வலிக்கும்.

'ஓமடா... உங்கடை ஒவ்வொரு தேவையளையும் கவனிச்சு, உனக்கு இது பிடிக்கும், உனக்கு அது பிடிக்கும் எண்டு ஆளாளுக்கு வாய்க்கு ருசியாய் அவிச்சுப்போட்டு, வளர்த்துவிட்ட அம்மாவுக்கு இன்னும் என்னடா தெரியவேணும்...?'

கத்தவேண்டும் போலிருக்கும்.

'அப்பன் சொல்லுறதைத்தானே பிள்ளையளும் மனப்பாடம் பண்ணிக் கதைக்குதுகள்...'

தனக்குள் சமாதானமாகிவிடுவாள்.

சத்தியநாதன்மீது ஆத்திரமாக வரும். மறுகணம் 'எனக்கா ஒண்டும் தெரியாது... உனக்குத்தான் முக்கியமான ஒண்டு தெரியாது... தெரிந்தால் உன்னால் தாங்க முடியுமா?' என்று தனக்குள் கேட்டு, அவனைப்

பழிவாங்குவதாகத் திருப்திய டைவாள்.

'என்னருமை ஆண் துணையே... குடும்பமென்றால் பெண்ணுக்கும் ஆணுக்குமிடையே ஒளிவுமறைவற்ற இணைவும் உறவும் வேண்டும் என்பதை அறிவாயா... உடலைப் பொறுத்தளவில் நிர்வாண ஒளிவு மறைவற்ற நிலையின் சங்கமம்மட்டுமே ஒரு குடும்பத்தின் ஆணிவேரென நினைத்தாயா? மனங்களின் நிர்வாணத் தன்மையில் எழும் சமநிலைச் சந்திப்புத்தான் உண்மையான குடும்பத்தின் அமைப்பும் குதூகலமும் என்பதை ஏன் உணர மறுக்கிறாய்.... உன் தேவைகளுக்காக மனதில் கபடம் வைத்துக் கழுத்தறுக்க நினைத்தால் வாழ்க்கையே கபடமாகிவிடும் என்பதை ஏன் நினைக்க மறந்தாய்.... அந்தக் கபடம் உன்னில் மட்டுமல்ல, உன் துணையிலும் பிரதிபலிக்கும் என்பதை ஏன் அறியாமல் உள்ளாய்?"

மூத்தவன் மதன் வளர்ந்து வாலிபனாகியபோது, அவனுக்கொரு வாழ்க்கைத் துணை தேடவேண்டும் என்ற எண்ணம் எழுந்தபோது, அதிலும் சத்தியநாதனின் கபட நோக்கத்திலெழுந்த விருப்பம்தான் முன்னின்றது.

"ஊரிலை பிறந்ததுகள் எண்டால் நாலு இடம் அடிபட்டு நாலு நல்லது கெட்டதுகளைத் தெரிஞ்சு வைச்சிருக்குங்கள்... மதன் இஞ்சை பிறந்தவன்... படிப்பும் ரீவியும் வீடும் வேலையும்தான் உவருக்கு தெரிஞ்சதெல்லாம்... வெளுத்ததெல்லாம் பால் எண்டு நம்பி ஏமாறுவான்... அவனைக் கொண்டு நடத்த அவனுக்கொரு சரியான சோடியைத் தேட வேணுமெண்டால் இந்த நாட்டிலை ஏலாது..."

"என்ன இருந்தாலும் அவன் இந்த நாட்டு சூழலிலை வளர்ந்த பிள்ளை.... இஞ்சை பிறந்ததுகள் தங்கடை போக்கிலை சுதந்திரம் அது இதெண்டு திரியேக்கை கொஞ்சமாலும் தாய் தேப்பனெண்டு மரியாதை குடுக்கிறான்...."

"அதுக்கென்ன இப்ப.... "

"இந்த நாட்டிலை வாழுற ஒருத்தியாலைதான் அவனோடை அனுசரிச்சு வாழேலும்...."

"ப்பூ.... எனக்கு நீ பெரிய பொருத்தம்தானே.... பெரிசாய் சொல்ல வந்தீட்டாய்... எங்கடை நாட்டிலை பிறந்து வாழுற ஒருத்திதான் அவனுக்குச் சரி... ஊர்ப்

பெட்டையள்தான் அவன்ரை போக்குக்கு விட்டுக் கொடுத்து நடக்குங்கள்..."

'சளீர்' என்று அவளது கன்னத்தில் அறைந்தாற்போல் தெறித்தன வார்த்தைகள்.

நந்தினிக்கு அவனது உள்நோக்கத்திலிருந்த கபடம் புரிந்தது.

மதனுக்கும் அவளைமாதிரி ஒரு அடிமையைத் தேடுகிறான்... அந்த அடிமைத்தனமுள்ள பெண் தாயகத்தில்தான் சுலபமாகக் கிடைப்பாள் என்று நம்புகிறான்.

அவன் நினைத்தமாதிரியே மதனுக்குத் துணையாக தாயகத்து உறவு ஒன்றிலிருந்து பெண் ஒருத்தி வந்தாள். பெயர் தமிழினியாகத் தமிழில் நிறைந்திருந்தது.

ஆனால் பாவம் சத்தியநாதனின் கணக்குகள் வேறு விதத்தில் தோற்றுவிட்டன.

அவள் மதனது தேவைகளை அக்கறையாகக் கவனிப்பதுபோல, அவனது கள்ளங்கபடமற்ற குணத்தை மாற்றுவதையும் அக்கறையாகக் கவனித்தாள். பெற்றோர் சகோதரன் எல்லோருமே ஒரே குடும்பம் என்று வளைய வந்தவன் ரொம்பத்தான் மாறிவிட்டான். 'தான், தனது குடும்பம்' என்ற எண்ணங்கள் அவனது செய்கைகளில் தமிழினிமூலமான மாற்றங்களாக வெளிப்பட்டன.

சத்தியநாதனும் வேலையிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டான். ஓய்வூதியம் என்ற பெயரில் ஏதோ ஒரு சொற்ப தொகை 'யூறோ'க்களில் வந்து அல்லாட வைத்தது.

நந்தினிதான் சமாளித்தாக வேண்டும்.

மூத்தவன்தான் நம்பிக்கை ஒளியாகத் தோன்றினான்.

"மதன்... நீதானடா இந்தக் குடும்பத்தைப் பார்க்க வேணும்.... அப்பாவுக்கு வாற காசு ஒண்டுக்குமே பத்தாது..."

அவன் தமிழினியைப் பார்த்தான். அவள் முந்திக் கொண்டாள்.

"ஏன் மாமி.... இவர்ரை 'கின்டர் கெல்ட்'... 'எக்சியூம் கெல்ட்' எல்லாம் எடுத்தது காணாதே... இனியும் ஏன் தொந்தரவு தாறியள்... மாமாவுக்கு வாற 'பென்சன்' காசு காணாதெண்டால்.... ஏதாலும் 'அல்ரர்ஹைம்'மிலை போய் இருந்தால் கவனிப்பாங்கள்தானே.... நாங்களும் இடைக்கிடை வந்து பாப்பம்தானே..."

மதனும் 'ஆமாம்' போட்டான்.

இவ்வாறு சிறுசிறு பிரச்சி

னைகள் பெரிதானபோது, இளையவன் சுதனும் தனியாகப் போய்விட்டான்.

அவள் எவ்வளவோ தடுத்தாள். கேட்காமல் வெளியேறினான்.

"ஜேர்மன்காரரைப் பாருங்கோ... இப்பிடி ஒரு வீட்டுக்கையே அடைஞ்சு கிடக்கிறாங்கள்.... இப்பிடி ஒண்டாய் இருந்து ஒருத்தரோடை ஒருத்தர் ஒட்டாமை வாழுறதிலையும் பார்க்க தனியாய் இருக்கிறது எவளவு சந்தோசம் தெரியுமே... உங்களுக்கு ஒண்டும் தெரியாது..."

சுதன் தனக்குத் தெரிந்த நியாயங்களைச் சொல்லி வெளியேறிவிட்டான்.

குடும்பத் தலைவனான சத்தியநாதனே தனது நலன்தான் முக்கியம் என்ற சுய நலப் போக்கில் வாழ்ந்தவனாச்சே?! அந்தச் சூழ்நிலையில் வளர்ந்த பிள்ளைகளும் தங்கடை சுயநலத்தைத்தானே கவனிக்கும்?!

ஆனால் தற்போது....

ஓரங்கட்டியவர்கள் எல்லாம் கட்டிலருகே ஒட்டி நிற்கிறார்கள். மருமகள் நேரம் தவறாமல் வந்து பார்க்கிறாள். மதன் அவளது தலையைக் கோதி, கண்கள் கலங்க என்னவோ எல்லாம் கேட்கிறான்.

காலில் பம்பரம் கட்டினால் போல் எந்நேரம் பார்த்தாலும் நண்பர் நண்பிகளென்று கும்மாளமிட்டுக் கொண்டு திரியும் சுதன்கூட அடிக்கடி வந்து அவளின் கட்டிலில் மணிக்கணக்காக அமர்ந்துகொண்டு, அவளைப் பார்ப்பதும் எங்கோ வெறித்து நோக்குவதுமாக இருக்கிறான். சில சமயங்களில் அவனது கண்களில் இருந்து உருண்டோடும் நீர்த்திவலைகள் அவளது கன்னங்களைக் கழுவிச் செல்கின்றன.

'மகனே... அம்மா என்ற அன்பு வற்றிவிடப் போகிறதென்று அழுகிறியா... என் கண்ணே... இப்பவாவது அன்பு பாசங்கள் உன்ரை கண்களைத் திறந்தால் எனக்கு மகிழ்ச்சிதான்... வேடிக்கைகளும் கேளிக்கைகளும் அன்பு உறவுக்கு முன்னாலை வெறும் துசு என்பது உனக்குப் புரிந்து, மனிதம் உன்னுள் புகுந்தால் அதுவே எனக்குப் போதும் கண்ணா...'

அந்தத் தாயுள்ளம் பிள்ளைகளுக்காக உருகியது. அவர்களின் எதிர்காலப் பிரகாசங்களுக்காகப் பிரார்த்தித்தது.

எல்லோரும் போய்விட்டார்கள். நாளை அவளைச் சந்திப்போமா என்ற கவலைகளை முகத்தில் ஏந்தியவாறு அங்கிருந்து சென்றுவிட்டார்கள்.

அமைதி.... அங்கே அமைதி....

அருகில் ஏதோ அசைவது போலிருந்தது. யாரோ நெருங்கி வந்து அவளருகே உட்காருவதை உணர முடிகிறது. தலையைத் திருப்பிப் பார்க்க இயலவில்லை.

'சத்தியநாதனாக இருக்குமோ...?'

அவளையும் அறியாமல் ஒருவித வெறுப்பு எங்கிருந்தோ வந்து உட்புகுந்து கொண்டது.

திடீரெனக் கட்டில் குலுங்கியது.

அவளின் கரங்கள் இரண்டையும் எடுத்துத் தனது கைகளுள் அடக்கியவாறு, உடல் குலுங்க சத்தியநாதன் விம்ம ஆரம்பித்தான். கண்கள் தாரைதாரையாக நீரைச் சிந்தின.

"நந்தினி.... நந்தினி..."

உணர்ச்சிப் பெருக்கீட்டால் நாக்குழற விம்மினான்.

"என்னை மன்னிச்சிடு நந்தினி.... உன்ரை அருமை பெருமையள் புரியாமை இவ்வளவு காலமாய் உன்னைக் கஸ்டப் படுத்தீட்டன்... என்னைத் தனிய விட்டுட்டுப் போடாதை... எனக்கு இந்த உலகத்திலை எப்பிடி வாழுறதெண்டே தெரியாது... எல்லாத்துக்கும் உன்னை நம்பித்தானிருந்தன்... நீயும் போவிட்டி எண்டால் என்னாலை எப்பிடி வாழேலும்..."

திக்கித் திணறி வார்த்தைகள் அழுகையினுடே வெளிவந்தன.

காலங்கடந்த ஞானமா? தனிமை தரப்போகும் பயத்தில் எழுந்த சுயநல ஒப்பாரியா?

பாவமாக இருந்தது. அதே நேரம் வேடிக்கையாக இருந்தது.

ஆண் என்ற மமதையுடன் நெஞ்சு நிமிர்த்தி வாழ்ந்தவனின் திமிரும் ஆணவமும் அதிகாரமும் எங்கே ஒளிந்துகொண்டன?!

'மன்னிப்புக் கேட்கிறான்!'

'மன்னிப்பதற்கு நான் யார்... எனக்கு அந்தத் தகுதி இருக்கிறதா?'

ஏதோ ஒன்று நந்தினியின் நெஞ்சில் எழுந்து முள்ளாகக் குத்தியது.

'உனது ஆண் என்ற கர்வத்துக்கும் போலிக் கௌரவத்துக்

கும் பயந்து இதுவரை நான் மூச்சுவிடுவதற்காக மறைத்த உண்மை ஒன்றை இப்போது சொன்னால் தாங்குவாயா என் கணவனே...?!'

கேட்கத் துடித்தாள். சொல்லி நெஞ்சில் குத்திக் கொண்டிருக்கும் முள்ளைப் பிடுங்கி அவன் முன்னால் போடலாமா என்று நினைத்தாள். ஜேர்மனியை மிதித்ததில் இருந்து மனதில் அடக்கி வைத்த அந்த இரகசியத்தை வெளியே போட்டு உடைக்கலாமா என்று சிந்தித்தாள்.

தாங்குவானா...?!

அன்று... ஜேர்மனிக்கு வரும்வழியில் ஏஜென்சிக்காரன் காமுகனாக மாறி, அவளைச் சித்திரவதை செய்து சக்கையாக்கியதைச் சொன்னால்... தாங்குவானா? இதேமாதிரி அவளிடம் மன்னிப்புக் கேட்பானா? அல்லது மீண்டும் ஆண் என்று அகந்தையுற்று விலகி ஓடுவானா?!

சுற்றி நின்ற சொந்த பந்தங்கள், தெரிந்த உறவுகள் யாவும் அவளின் சடலத்தைத் தகனம் செய்யவாவது முன்வருமா?! அவள் கற்பிழந்தவள் என்று காரணம் கூறி ஒதுங்கிவிடுவார்கள். பச்சாதாபங்கள் யாவுமே பறந்தோடிவிடும்.

கணத்துக்குக் கணம் மாறும் மனித மனங்களை எண்ணும்போது எழுந்த வேதனை புன்னகையாக வெளிக்கிளம்பி அவளது முகத்தில் நிரந்தரமானது.

அந்தப் புன்னகையில், வெண்தாடிக் கிழத் தமிழனான திருவள்ளுவன் 'யாகாவா ராயினும் நாகாக்க காவாக்காற் சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு' என்ற திருக்குறளுடன் வந்து உட்கார்ந்துகொண்டான்.

---

நல்ல செயல்களை நாமாகத் தேடிச் செய்ய வேண்டும். அவை நம்மை நாடி வரா.

வாழ்க்கையை நேசிப்பவர்களாக இருந்தால் நேரத்தை வீணாக்காதீர்கள். ஏனென்றால் வாழ்க்கை நேரத்தால் ஆனது.

– விவேகானந்தர்

□□□

நண்பனுக்காக உயிரைக் கொடுப்பது என்பது எளிது. ஆனால் உயிரைக் கொடுப்பதற்குரிய நண்பன் கிடைப்பதுதான் அரிது.

– கதே

□□□

மலை புயலுக்கு அசைந்து கொடுப்பதில்லை. அறிவாளி புகழ்ச்சிக்கு அடிமையாவதில்லை.

– புத்தர்

□□□

# கலைகளும் உலகமும்

-அழலாடி

கதிரவனில் இருந்து உடையுண்ட தழல் துண்டங்கள் கதிரவனின் ஈர்ப்புக் காரணமாக கதிரவனை விட்டுப் பிரிந்தாலும், ஒரு குறிப்பிட்ட எல்லையுள் நின்று கொண்டு, ஈர்ப்பலைகளின் வேகங் காரணமாக கதிரவனைச் சுற்றி ஓடத் தொடங்கின. இந்த ஈாப்புவிசை காரணமாக ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட பாதையில் நிகழ்ந்தது. இப்படி ஓடிக் கொண்டிருந்த துண்டங்கள் விரைவின் காரணமாக, காற்றுடன் இடைவிடாது மோதின. காற்றின் மோதல், தழலை ஆற்றத் தொடங்கியது. குழம்பு நிலையில் இருந்த தழல் துண்டங்கள் மேற்பரப்பில் குளிரத் தொடங்கின. அதனால் அவற்றின் மேற்பரப்பு பாறைகளாகின. இவ்விதம் உருவாகிய ஒன்பது கோள்கள் அடங்கிய சூரிய குடும்பத்தில் பூமி எனும் நமது உலகமும் ஒன்றாகும். எனவே பூமி தனது ஆரம்ப நிலையில் மண்ணற்ற பாறையாகவே இருந்தது. இப்பாறைப் பூமியின் பள்ளத் தாக்குகளில் மழைநீர் தேங்கி, அதனுள் முதல் உயிர்ப்புத் தோன்றியது. முதலில் நீரினுள் தோன்றிய பாசி போன்ற உயிரினங்கள் காலப்போக்கில் இடமாற்றம் சூழ்நிலைகளால் கூர்ப்படைந்து (பரிணாமம்) வெவ்வேறு உயிர் அமைப்புகளாக மாறின. இவ்விதம் பலகோடி ஆண்டுகளாக உயிரினங்களின் கூர்ப்பின் வழி மனித இனம் தோன்றிற்று. முதல் மனிதன் தோன்றியபோது பூமி முற்றாகப் பாறையால் ஆனதாகவே இருந்தது. இவ்விதமாக உயிர்க் கூட்டத்துள் முதல்மனிதன் தோன்றிய இடமாக அமைந்த பகுதி இன்றைய அறிவியலாளர்களால் 'இலெமூரியா' என்று அழைக்கப்படும்,இலக்கியவாதிகளால் 'கோண்டாவனம்' என்கிற குமரிக் கண்டம் ஆகும்.

இந்தக் குமரிக் கண்டத்தில் தோன்றிய முதல்மனிதன்தான் தமிழன். இந்த விடயத்தை புனித வேதாகமத்தின் பழைய ஏற்பாடு கூடக் கூறுகிறது. இந்தக் குமரிக் கண்டத்தில் தோன்றிய மனிதன் தான் தமிழன் என்பதை உலகில் அனைவரும் அறிவர். இந்த மனி

தன் உயிர்த்தபோது குறிஞ்சி நிலம் எனப்படும் மலை நிலம் மட்டுமே உலகில் இருந்தது. இந்த மனிதன் உயிர்களின் ஒலிகளில் இருந்தும்— இயற்கையின் ஒலிகளில் இருந்தும் கருத்துத் தொடர்புகளுக்கான மொழியை உருவாக்கினான். அந்த மொழியே உலகின் முதன் மொழி— அதுவே தமிழ். இந்த மொழியைப் பேசியவன் தமிழன். அதனால்தான் 'கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்த தமிழ்' என்கிறது தமிழ் இலக்கியம். இதைப் புரிந்து கொள்ளாத தமிழறிவு மண்டுகங்கள், மண் தோன்ற முன் எப்படி மனிதன் தோன்றினான் என்கிறார்கள். இரவு பகல், பருவ காலங்களால் இந்தப் பாறைகள், சிதிலம் அடைந்து துகள் துகளாகி அவை நீரோட்டம் காரணமாக மலையினின்றும் கீழ் இறங்கிப் படிவு பெற்று மண் நிலம் தோன்றிற்று. இந்த மண்ணில் மலையிலிருந்து நீருடன் இறங்கிய தாவரங்களின் பரிணாமத்தில் மரம் உருவாகி காடு உருவாகி— முல்லை நிலம் உருவாகிற்று.

குறிஞ்சியில் இருந்து மனிதன் முல்லைக்குள் இறங்கினான். இங்கிருந்து தன் வாழ்வுப் பயணத்தைத் தொடங்கினான். பள்ள நிலம் வந்தான். அது மருத நிலம். தொடர்ந்தான். கடலைக் கண்டான். அது நெய்தல் நிலம். இந்த ஒழுங்கின் படியே குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்று உலகியல், மனிதவியல் வரலாற்றுத் தொடர்வை அப்படியே தமிழ் இலக்கியம் கூறும். இதைப் புரியாத, புதிய அறிவியற் சமுதாயம்— புதிய நாகரீகப் பழமைகளைத் தேடித் தடுமாறுகின்றது.

இந்த மனித குல வளர்ச்சியின்போது குறிஞ்சியில் இருந்து முல்லைக்கு இறங்கிய மனிதன், காடுகளில் தன் கலையுணர்வை அடைந்தான்.

முறிந்த மூங்கில்களின் துளையுள் காற்று வலிந்து நுழைந்தபோது இன்னிசை பிறந்ததைக் கண்டான். மூங்கிலில் பிறந்தது வேய்ங்குழல். வேய் என்பது மூங்கில். மூங்கில் ஒரு புல். புல்லால் ஆன குழல் புல்லாங்குழல் ஆயிற்று. இதே காலவேளையில் பலத்த காற்று வீசும்போது இணர்டு கோறை மரங்கள் அடியுண்ட போதும், அவன் வேட்டையாடப் பாவித்த கல்லாயுதங்கள் கோறை

மரங்களில் பட்டபோதும், 'ம்..' எனும் ஓசை கிளம்பி காற்றில் பரந்தது. துளையுண்ட மரத்தில் உயர்ந்த கீதம் பிறப்பதைக் கண்டான். எண்ணினான். உடுக்கை பிறந்தது. இந்த உடுக்கில் பிறப்பது, 'ம்..' எனும் ஒலியானது நாதங்களின் மூலமானது. உலகின் எல்லா வித ஒலிகளும் காற்றில் கலந்து கரையும்போது, 'ம்..' ஒலியே முடிவாகும். இந்த 'ம்..'மே ஓம் ஆகி– மனிதன் கண்டறிந்த இறைவனின் மூல உருவான பிரணவம் ஆக்கி, இறைவனை நாத வடிவினன் ஆக்கினான். அந்த 'ஓம்' பிறப்பது மிருதங்கத்திலாகும். உலக முதல் மனிதன், உலகக் கலைகளின் தோற்றமாக இதைக் கண்டறிந்து, உலகிற்கு வழங்கினான். இன்று அவனுடைய– மனித இனத்தினுடைய முதற் கடவுள் சிவன் கையில் உடுக்கையையும், முல்லை நிலக் கடவுளான கண்ணனின் கையில் புல்லாங்குழலையும் கொடுத்தான் தமிழன்.

இந்த மிருதங்கத்தில் பிறந்த 'ஓம்' எனும் நாதத்தை இறையுடன் இணைத்து இறைவனை நாத வடிவாக்கினான் தமிழன். இந்த நாதம் பற்றியும் அதில் இறைமையைக் காண்பது பற்றியும் கவிஞன் சுப்பிரமணியன் மிக அழகாக கூறுகிறான். 'குயிற் பாட்டில்' பின்னாளில் ஒரு சினிமாக் கவிஞன் 'ஓங்காரமாய் விளங்கும் நாதம்' என்று பாடினான்.

இந்த நாதத்தைத் தந்த உடுக்கையே சிலம்பில் தண்ணுமை என்றும் இன்று மிருதங்கம் என்றும் குறிப்பிடப்படும் கருவியாகும்.

இந்த மிருதங்கமே உலக இசைகளின் ஆதியாகவும், இசையூடான மெய்ப்பாட்டுக் கலைகளின் தோற்றத்திற்கு அடித்தளமாகவும் அமைந்தது.

பழமைக்கும் பழமையாகவும் உலக இசைக் கலைகளின் தோற்றத்திற்கும் இருந்தது தமிழர்களின் இசைகளும் கலைகளும்தான். இதை உணர்ந்து ஒவ்வொரு தமிழனும் பெருமை கொள்ள வேண்டும்.

இன்று– சூழ்நிலைக் காரணங்களால் தமிழினத்தின் வாழ்நிலை உலகெங்கும் பரவி வளர்ச்சி அடைந்து வருகின்றது. அப்பணியில் முயலும் அமைப்புகள், இக் கலைப் பணியில் தூய தமிழ் எண்ணங்களுடனும், தமிழ்

முயல்வுகளுடனும் மேற் டாக வேண்டுகின்றேன்.

கொள்ள வேண்டுமாய் இதனூ

✸

ஒரு அரசியல்வாதி தேர்தல் பிரச்சாரக் கூட்டமொன்றில்,

'நாங்கள் ஆட்சிக்கு வந்தால் முதல் ஐந்தாண்டுத் திட்ட முடிவில் உங்களுக்கு ஒரு சைக்கிள் தருவோம். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் ஆளுக்கு ஒரு கார் தருவோம். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டமுடிவில் உங்களுக்கு ஒரு விமானம் கொடுப்போம்!' என்று அளந்து கொண்டிருந்தார்.

கூட்டத்தில் இருந்த ஒருவர்,

'விமானத்தை வைத்துக் கொண்டு நாங்கள் என்ன செய்வது?' என்று கேட்டார்.

அதற்கு அந்த அரசியல்வாதி,

'இந்த நாட்டு கஸ்டங்களிலை இருந்து தப்பி வேறு நாட்டில் அரசியல் தஞ்சம் கோருவதற்கு விமானம் உதவியாக இருக்குமே!' என்றாரே பார்க்கலாம்.

✸

ஒரு விமானம் பறந்து கொண்டிருக்கிறது. அதில் மொத்தம் நாலு பேர் இருக்கிறார்கள். ஒரு விமானி, ஒரு பெரியவர், ஒரு பாடசாலை மாணவன், ஒரு அரசியல்வாதி. விமானத்தில் திடீர் என்று கோளாறு. இன்னும் சிறிது நேரத்தில் விமானம் கீழே வீழ்ந்து நொறுங்கக் கூடிய நிலைமை. எல்லோரும் 'பாரசூட்' மூலமாகக் கீழே குதிக்க முடிவு செய்கிறார்கள். அவர்கள் நாலுபேர். ஆனால் இருப்பதோ மூன்று 'பாரசூட்'கள்!

என்ன செய்வது?

அரசியல்வாதி முந்திக் கொண்டார். 'நான் மிகவும் முக்கியமானவன். நாட்டைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு எனக்கு உண்டு. எனவே, உங்களைவிட என்னுடைய உயிர் முக்கியமானது. நான் முதலில் குதித்து விடுகிறேன்.'

இப்படிச் சொல்லிவிட்டு மற்றவர் பதிலுக்குக்கூடக் காத்திராமல் ஒரு 'பாரசூட்'டை எடுத்து முதுகில் கட்டிக்கொண்டு கீழே குதித்துவிட்டார். மற்ற மூவரும் கவலையோடு பேசிக் கொண்டார்கள்.

'இப்ப நாங்கள் மூண்டுபேர் இருக்கிறம். ஆனால் இருக்கிறது இரண்டு 'பாரசூட்'கள்தான்! என்ன செய்வது?'

உடனே அந்த மாணவன் கூறினான். 'பயப்பிடாதீங்க... நாங்கள் மூண்டு பேருமே தப்பிக்கலாம். எங்கள் மூண்டு பேருக்குமே மூண்டு 'பாரசூட்'கள் இருக்கு... எப்படி என்றால் அந்த அரசியல்வாதி அவசரத்திலை என்ரை புத்தகப் பையை (School Bag) எடுத்து முதுகில் கட்டிக்கொண்டு குதித்துவிட்டார்.'

# கனவின் மீதி...

-அனுபவன்

முப்பத்தியொரு தலைப்புகளில் தனது உணர்வுகளை கவிதையாகப் பிரசவித்திருக்கிறார் கி.பி. அரவிந்தன். புலம் பெயர் வாழ்வு பற்றிய நெருடல்களை நெஞ்சிலிருந்து இறக்கி வைக்க முயற்சித்த வேளையில் உயிரொடியும் ஓசையாக அவை வெடித்திருக்கின்றன.

துயரத்தின் பிழிவுகளும், அதனாலெழும் தவிப்புகளும் அரவிந்தனின் கவிதையெங்கணும் ஆழமாக படிந்து படிப்போரின் இதயங்களை பிசையவைக்கிறது.

தாயக விடுதலைப் போராட்டத்தின் அவசியத்தை தியாகி சிவகுமாரன் வாழ்ந்த காலத்தில் தன்னுள் உள்வாங்கிக்கொண்ட கி.பி. அரவிந்தன் தற்போது தீவிர அரசியலிலிருந்து

ஒதுங்கி சமூக மேம்பாடு, பொறுப்புணர்வு மிக்க செயற்பாடுகளில் தன்னை இணைத்துக் கொண்டிருக்கிறார்.

"இனி ஒரு வைகறை" "முகம் கொள்" ஆகிய கவிதைத் தொகுப்புகளைத் தொடர்ந்து கனவின் மீதி வெளிவந்திருக்கிறது. இதோ... கனவின் மீதியிலிருந்து...!

## மழை

நகரம் குறண்டிப்போய்
எரிவிளக்கும் நனைந்தபடி
ஒளியுறிஞ்சும் புகாரில்
போர்வையாகும் நீர்மை.

உசும்பும் காற்றில்
இலையுதிர்க்கும் மரங்கள்
பரிதவிக்கும் எனைப்போல்.

வானம் பூமியுடன்
புணரும் தருணம் போலும்
விந்தென கசிந்து வழிந்து
பொழிகின்றது மழையாய்.

நனையாத ஆடையுள்
மறைந்து திரியும் மனிதருள்
இந்த மழையை
ஏன்தான் நான் நோக்குகிறேன்.

கானல் நீர் தேடி
பாலையாகிறவன் நான்
அழகுறுமோ மழைநாள்
எனக்கு.

அடிபிய்ந்த என் சப்பாத்துள்
சளசளப்பாய்
நாசமாய்ப் போன மழை.
குதித்தோடும்
மழைநாள் ஊரில்

வெறுங்கால் வெறும்மேல்
சில்லிடப் பூக்கும்
நிலம்.

அந்தமழை எப்போது விடும்
என்னை....?

# எனது நாடகப் பார்வை!



ஈழத்து நாடக வரலாற்றில் புதிய போக்கை நிறுவியவர்களுள் தாசீசியசும் ஒருவர். அவர் மேற்கத்திய நாடக நுட்பங்களையும், தமிழ் மரபுக் கலைகளையும் இணைத்து புதிய போக்கை ஏற்படுத்தினார். அது மிகுந்த வரவேற்பைப் பெற்றது. பலரை ஈடுபட வைத்தது. அந்தப் போக்கில் பல நாடகங்களைத் தயாரிக்க வைத்தது. அந்த வகையில் தாசீசியஸ் சிறந்த நடிகர் விருதையும், சிறந்த இயக்குனர் விருதையும் இலங்கை ஜனாதிபதியிடமிருந்து பெற்றார். ஆரம்பத்தில் ஆங்கில நாடகத் தயாரிப்புகளில் ஈடுபட்டு, மேற்கத்திய நுட்பங்களைக் கற்று, பின் தமிழ் நாடகத்திற்குத் திரும்பி கிராமம் கிராமமாக அலைந்து மரபை நாடகத்திலே இழையோடச் செய்தார். 'கற்றது கை மண்ணளவு' என்றாலும் அதை முழுமையாகப் பயன்படுத்துகிறார். அவரது நாடகப் பயிற்சிகளை ஈழத்து அறிஞர்கள் பலரும் போற்றுகிறார்கள். நாடக வரலாற்றில் அவருக்கு முக்கிய இட

**மளிக்கிறார்கள். கடந்த பத்து ஆண்டுகளாக லண்டன் பி.பி.சி நிறுவனத்தில் பணியாற்றினாலும், நாடகத்தில் தொடர்ந்து ஈடு பட்டுக் கொண்டிருக்கிறார். இவரது சமீபத்திய நாடகமான 'ஸ்ரீ சலாமி' ஜெர்மன் மொழியில் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள் ளது. அதோடு தாசீசியஸ் ஐரோப்பிய நாடுகளில் நாடகப் பயிற்சி யளித்து வருகிறார். ஸ்விட்சர்லாந்து தனது எழுநூறாவது ஆண்டு விழாவைக் கொண்டாட நினைத்தபோது அங்கு கலாச் சார நிகழ்ச்சிகளுக்கு ஆலோசகராகவும் பயிற்சியாளராகவும் தாசீ சியஸைத் தேர்வு செய்தது. இப்படி தமிழ் நாடகக் கலைஞர் ஒருவர் மேற்கத்திய நாடுகளில் பயிற்சியளிப்பது தமிழுக்குப் பெருமை. அந்தப் பெருமை கொண்ட தாசீசியஸை தமிழக சஞ்சிகையான 'சுபமங்களா' *1995*ம் ஆண்டில் கண்ட நேர்காணல் இதோ –**

☞ உங்களை யாராக அறிமுகப்படுத்திக் கொள்ள விரும்புகிறீர்கள்?

● நாடகன் என்று அறிமுகப்படுத்திக் கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் நான் நாடகத்தைக் கற்றவன், கற்றுக் கொடுப்பவன் என்ற முறையில் அப்படிச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

☞ நாடகம் என்றால் என்னவென்று சொல்வீர்கள்?

● எனது பேராசான் சு. வித்தியானந்தம் நாடகத்தை நாடு+அகம் அதாவது நாட்டின் அகத்தைக் காட்டவதுதான் நாடகத்தின் பணி என்றார். அப்படி அகத்தைக் காட்டும்போது அதில் உள்ள பிரச் சினைகளை எவ்வளவு தூரம் தீர்க்கலாம் என்ற ஆய்வைத் தருவ தாக இருக்க வேண்டும் என்றும் சொன்னார்.

☞ நாடகத்தில் ஈடுபட்டது எப்படி?

● இலங்கையில் கிராமங்களிலே நாடக, கூத்து வடிவங்கள் ஓம்பி வளர்க்கப்பட்டன. நான் சிறுவனாக இருந்தபோது கூத்துப் பயிற்சி நடக்கும். பெரியவர்கள் ஒருபக்கம் பயிற்சி எடுத்துக் கொண்டால் சிறுவர்கள் அதைப் பார்த்து தூரத்தில் தாங்களாகவே பழகுவார்கள்.

அப்படி நானும் செய்திருக்கிறேன். அது தந்த ஈடுபாடு முக்கியமானது. பின்னர் பள்ளிக்கூடத்தில் நடந்த நாடகப் போட்டியில் நடித்தது– அதாவது குசேலர் நாடகத்தில் முதல் மகனாக நடித்தேன். அந்த நாடகத்தில் அப்பா உணவை அம்மாவிடம் கொடுத்ததும், பிள்ளைகள் அனைவரும் சாப்பிடப் போட்டி போடுவார்கள். அப்போது எனது கால்சட்டையை தம்பிகள் இழுப்பார்கள். அப்படி ஒத்திகையில் இழுக்கும்போது கால்சட்டை அவிழாது. ஆனால் நாடகப் போட்டியில் (மேடையில்) ஒரு மஞ்சள் துண்டு கட்டியிருந்தேன். வழக்கம்போல உணவைப் பிடுங்கிச் சாப்பிடும்போது தம்பி இழுத்தான். துண்டு அவிழ்ந்துவிட்டது. உள்ளே எதுவும் இல்லை. நானோ சாப்பிடுவதில் குறியாக இருந்தேன். சாப்பிட்டு முடித்த பின்பு இடுப்பைப் பார்த்தால் துண்டு இல்லை. பிறகு பார்த்தேன். கீழே கிடந்தது. எடுத்துக் கட்டிக் கொண்டேன். ஆனால் ஏதாவது தண்டனை கிடைக்குமோ என்று பயந்தேன். பரிசளிப்பு நிகழ்ச்சி நடந்தது. பின்பு நடுவராக வந்திருந்த, சேக்ஸ்பியர் நாடகங்களை இயக்கிய ஆம்ஸ்ட்ராங் என்பவர் 'நாயகன் நாயகிக்குப் பரிசு கொடுத்து விட்டீர்கள். ஆனால் நான் ஒரு சிறந்த நடிகனுக்குப் பரிசு தரப் போகிறேன்' என்று தனது பையிலிருந்து பத்து ரூபாயை எடுத்து, என்னைப் பாராட்டிக் கொடுத்தார். அது ஒரு பிடிப்பாக அமைந்தது. அதிலிருந்து நடிப்பதற்கு நம்பிக்கையும் பெற்றேன். பிறகு ஒன்பதாவது வயதில் எனது கூத்து அரங்கேற்றம் நடந்தது. அதற்குப் பின்பு இலங்கை பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியர் ஆஸ்லி ஹல்பேவிடம் ஆங்கில நாடகப் பயிற்சி எடுத்துக்கொண்டேன். அப்போது ட்ராம்ஸாக் என்ற நாடக அமைப்புடனும் தொடர்பு வைத்தக் கொண்டேன். அந்த நேரம்தான் நாடகத்தில் தீவிரமாக ஈடுபட்டேன்.

☞ நாடகக் கலையை எப்படிக் கற்றீர்கள்?

● கொழும்பு லையன்ஸ்வென்ட் அரங்கத்தில் ஆங்கில நாடகங்கள் நடத்தப்பட்டபோது அவற்றை ஏர்னஸ்ட் மெக்கின்டைர் என்ற நாடக விற்பன்னர் தயாரித்து வந்தார். அவர் ஒரு நாடக விஞ்ஞானி. அவர் இங்கிலாந்து நாட்டில் மேடையேறும் ஆங்கில நாடகத்தை

சமகாலத்தில் இலங்கையிலும் அரங்கேறச் செய்தார். அவருடன் ஐரோப்பிய, அமெரிக்க இயக்குனர்கள் தங்கும்போது, அவர்களுக்கு நான் சேவை செய்து கொண்டு நாடக அனுபவங்களைக் கேட்டது தனி சுகம். மெக்கின்டைர் ஆதரவில் திரை தூக்குவதில் ஆரம் பித்து, நாடக நெறிப்படுத்தலை என்னிடம் முழுமையாக நம்பி அவர் ஒப்படைக்கும் வரை நம்பிக்கையாகக் கடமை செய்தேன். இந்த நேரத்தில்தான் ஷேக்ஸ்பியர், பிரெக்ட், சாமுவேல் பெக்கெட், இப்சன், ஆஸ்கார் ஒயில்ட், டென்னிஸி வில்லியம் போன்ற சிறந்த நாடகாசிரியர்களின் நாடகத் தயாரிப்புகளில் ஈடுபட்டேன். பின்னர் அக்கொய்னர் பல்கலைக் கழகத்தில் இரண்டாண்டு கால நாடகப் படிப்பை மேற்கொண்டேன். படிப்பின்போது நிறைய வெளிநாட்டு இயக்குனர்களிடம் பயிற்சி பெற்றேன்.

☞ நாடகப் பயிற்சிக்குப் பிறகு எந்தெந்த நாடகங்களை எப்படித் தயாரித்தீர்கள்?

● மகாகவியின் 'கோடை' என்ற கவிதை நாடகம், இசை கலந்த 'புதியதோர் வீடு' போன்ற நாடகங்களைத் தயாரித்தோம். கோடை நாடகத்தை முதல் கவிதை நாடகம் என்று விமர்சகர்கள் சொன் னார்கள். 'புதியதோர் வீடு' நாடகத்திற்காக பரத நாட்டிய ஆசிரியரை அழைத்தோம். அவர் பரத நாட்டியத்தை நாடகத்தில் சேர்ப்பதைக் குற்றமாகக் கருதினார். அதனால் நான் ஏழு ஆண்டுகள் 'கண்டி நடனம்' பயின்றேன். இப்படி ஒவ்வொரு துறையையும் நுணுகி நுணுகிக் கற்றுக் கொண்டேன். நான் கற்றவையோடு நாட்டுக் கூத்தின் தாள லயத்தை இணைத்தேன். அது மிகவும் உதவியது. இவற்றை நாடகத் தயாரிப்பில் வழங்கியபோது வரவேற்புக் கிடைத் தது. எனக்கு தன்னம்பிக்கை உண்டாயிற்று. அன்றிலிருந்து தாள லயம் புதுமையானது. அதிலிருந்து புதுப்புது வடிவத்தைக் கண் டேன். இதற்கு கே.எம்.வாசகர் என்ற வானொலித் தயாரிப்பாளரின் பங்கு முக்கியமானது. அவர்தான் எனது கிராமியக் கூத்துத் திரட் டல்களை நாலரை ஆண்டுகள் வானொலி மூலம் ஒலிபரப்ப எனக்கு வழிவகுத்து தந்தார். பிறகு வானொலி மூலம் தேடலைத் தொடர வும் முடிந்தது. அதற்கு மட்டக்களப்பு கலெக்டர் எதிர்மன்னசிங்கம் கலாச்சாரத்துறையுடன் பேசி, ஜீப் எடுத்துக் கொடுத்து, கிராமம்

கிராமமாகச் செல்ல உதவினார்.

☞ அப்போது ஈழத்து நாடகச் சூழல் எப்படி இருந்தது?

● அந்த நேரத்தில் நாடோடிகள், கூத்தாடிகள், அம்பலத்தாடிகள் ஆகிய மூன்று முக்கிய நாடகக் குழுக்கள் கொழும்பில் இருந்தன. ஒவ்வொருவரும் தனித்தனியாக இயங்கி பலவீனப்படுவதைத் தவிர்த்து ஒன்றாகச் செயல்படலாம் என்ற ஆலோசனை ஏற்கப்பட்டு மூன்று குழுக்களும் ஒன்றிணைந்தோம். நடிகர் ஒன்றியம் என்ற அமைப்பைத் துவங்கினோம். அது இலங்கை நாடக வரலாற்றில் முக்கியத்துவம் கொண்டது. அதோடு 'ரசிகர் அவை'யைத் துவக்கி 1500 பேரை உறுப்பினர்களாக சேர்த்தோம். அவர்களுக்கு மாதம் ஒரு நாடகம் வீதம் வழங்கினோம். இதில் கிராமப்புற கூத்துகளும் இடம் பெற்றது ஒரு முக்கிய அம்சம். நடிகர் ஒன்றியம் கிராமம், நகரம் இரண்டுக்கும் ஒரு பாலமாக அமைந்தது. இந்த மாதிரி நாடகங்களுக்கு முன் நடத்தப்பட்ட நாடகங்கள் அரங்கப் பிரக்ஞை இல்லாமல் செய்யப்பட்டன.

☞ உங்களுக்கு உந்து சக்தியாக இருந்தவர்கள்...?

● நாடகப் பிரதிக்கு– கவிஞர் மகாகவி, குழந்தை சண்முகலிங்கம்: நெறியாட்சிக்கு– ஏர்னஸ்ட் மெர்கெண்டைர், நா.சுந்தரலிங்கம்: தமிழ்ச் செம்மைக்கு– பி.பி.சி சங்கரண்ணா: சமுதாயப் பார்வைக்கு– இளைய பத்மநாதன், சண்முகம் முத்துலிங்கம், பேராசிரியர் சிவத்தம்பி: ஐரோப்பாவில் காலூன்றுவதற்கு லண்டனில் களரி அமைப்பு, ஐரோப்பாவில் பீட்டர் பிரெஸ்லர், சுவிட்சர்லாந்தில் பொன் ராஜா ஆகியோராவர்.

☞ நீங்கள் ஒரு நாடகத்தை எப்படித் தயாரிக்கிறீர்கள் என்பதை விளக்க முடியுமா?

● ஒரு நாடகத்தை எடுக்கும்போது அதன் உள்ளடக்கத்தைப் பார்ப்பேன். அது எனக்கு ஓர் உள்ளக் கிளர்ச்சியைத் தர வேண்டும். பின்பு அதை கலையழகுடன் வெளிப்படுத்த முடியுமா என்று யோசிப்

பேன்: அதில் ஒரு சவாலையும் எதிர்பார்ப்பேன். அப்படி இல்லாத நாடகத்தை எடுக்க மாட்டேன். அப்படி முடிவு செய்த நாடகப் பிர தியை கிட்டத்தட்ட நூறு தடவை படிப்பேன். அதன் சகல அம்சங் களையும் உணர்வேன். நாடகத்தில் வரும் பாத்திரங்கள் ஒவ்வொன் றும் பிரசவிக்கப்படும் சரியான நேரம் எது என்பதையும் உறுதியாக நிச்சயித்துக் கொள்வேன். இங்கு கணம் தவறினால் கூட பாத்திரம் செத்துப் பிறந்த சிசுவாகி விடும். அதற்குள் நாடகமும் மனப்பா டமாகி விடும். நாடகத்தின் மேடைக் குறிப்பை தேவைக்கேற்ப மாற்றியமைப்பேன். பிறகு நாடகச் செய்தி முக்கியத்துவத்திற்கு ஏற்ப வேகத்தைத் தீர்மானிப்பேன். நாடக ஆசிரியனின் வேகத்தி லிருந்து என் வேகம் மாறுபடலாம். நடிகர்களுக்கும் பிற கலை ஞர்களுக்கும் சவாலை ஏற்படுத்தி அதற்கு உறுதுணையாக இருப்பேன். நடிகர்களுடன் சந்திக்கும் முதல் சந்திப்பில் நாடகப் பிரதியை உடனே அறிமுகம் செய்யாமல், வேறு அடிப்படையான விஷயங்களில் பயிற்சி நடத்துவேன். பிறகு காட்சிகளாக வியூ கங்களை அமைத்து, வியூகங்களுக்கு ஏற்ப காட்சிப் பொருட்களைப் பயன்படுத்துவேன். இதற்குப் பின்தான் பிரதியைக் கையில் எடுப் பேன். இந்த நேரத்தில் எந்த நடிகர் எந்தப் பாத்திரத்தை ஏற்க முடி யும் என்பது உறுதியாகி விடும். பிறகு பின் மேடைக் கலைஞர் களுடன் வேலை செய்வேன். இப்படி கூட்டாக விவாதித்த தயா ரிப்பில் ஈடுபட்டாலும் தனித்துவத்திற்கு இடம் கொடுப்பேன். அலோ சனைகளை வரவேற்று அவர்களை உற்சாகப்படுத்துவேன். இப்படி ஆண்டு ஒன்றுக்கு ஒன்று அல்லது இரண்டு நாடகங்களைச் செய் தாலே போதும் என்று நினைக்கிறேன்.

☞ யாழ்ப்பாணத்தில் உள்ள நாடக அரங்கக் கல்லூரி பற்றி பலரும் பெருமையாகச் சொல்கிறார்கள். அக்கல்லூரி நாடகத்திற்கு ஆற்றிய பங்கு என்ன?

● நாடக அரங்கக் கல்லூரி ஆரம்பித்தபோது எனக்கு அழைப்பு வந்தது. அதற்கு முன்பே நாடகம் செய்த அனுபவம் நம்பிக்கை யளித்தது. அதன் பொருட்டு கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வந்து சனி, ஞாயிறுகளில் பயிற்சி கொடுத்தேன். பயிற்சி பெற பல பகுதிகளிலிருந்தும் பலர் வந்தார்கள். சிலர் அரை நாள் பிரயாணம்

செய்து முறையான பயிற்சிக்காக வந்தார்கள். அவற்றை எல்லாம் நினைத்து அக்கறையோடு செய்தேன். இப்படி பயிற்சிக்காக வந்த வர்களும், குழந்தை சண்முகலிங்கமும் என் மீது வைத்த நம்பிக் கையும் ஒரு வாரம்கூட தவறாமல் போக வேண்டிய மன உறுதி யைத் தந்தது. மேலை நாட்டுப் பயிற்சிகள், குரல் பயிற்சி, நாட்டுக் கூத்தில் நான் பெற்ற ஆட்டப் பயிற்சிகள் அனைத்தையும் கொடுத் தேன். பல கூத்துக் கலைஞர்களை அழைத்து ராக, ஆட்டங்களைக் கற்றோம். அவர்களுக்கு வேறு சில பயிற்சிகளைக் கற்பித்தோம். இந்த நேரத்தில் எனக்கு மிகவும் பிடித்த விஷயம், ஒவ்வொருவ ரும் கொண்டு வரும் கட்டுச் சோற்றை எடுத்து, தனி தட்டில் நிரப்பி நான் உண்ணத் தருகிறபோது, எழுபது எண்பதுவித உண வுகள் வந்ததுபோல எழுபது எண்பதுவித உறவுகளும் வந்தன. சாதி, மதம் பற்றி தீவிரமாக இருந்தபோதுகூட, பெரிய சாதியைச் சேர்ந்த முதிய நடிகர்கள் பலர், பல சாதி சாப்பாட்டிலிருந்து ஒரு கவளம் எடுத்துக் கொள்ள காலப் போக்கில் பழகினார்கள். பிறகு நானும் யாழ்ப்பாணத்திற்கு வேலையை மாற்றிக் கொண்டேன். இந் தப் பயிற்சிகளை அடிப்படையாகக் கொண்டு நாடகத்தில் புதுப்புது வியூகங்களை அமைக்க மாணவர்களும் பயின்றார்கள். ஆசிரியர்கள் ஊக்கம் பெற்றார்கள். நாடகத்தில் பொய்மையை அறுக்க சத்திய உணர்வை வலியுறுத்தினேன். நடிகர்களிடமும் நாடக ஆசிரியர்களி டமும் அது வந்தது. யாழ்ப்பாண மக்களின் மனநிலையைப் புரிந்து பலரையும் குழந்தை சண்முகலிங்கம் ஒன்று சேர்த்தார். கால சந்தி யை ஏற்படுத்திய பெருமை அவருக்கு உண்டு. இப்படியான சூழ்நி லையில், நாடக அரங்கக் கல்லூரியில் கூடிப் படித்தவர்கள் புது மெருகோடு தங்கள் ஊரில் தொடர்ந்து நாடகங்களைப் படைத்தார் கள். நாடக உருவகமும் உள்ளடக்கமும் புதுப் பரிமாணங்கள் பெற் றன என்று சொல்லலாம். என்னை 'நெருப்பன்' என்பார்கள். அதாவ து நான் கோபப்படுவதை அப்படிச் சொல்வார்கள். நான் கோபப் பட்டால் குழந்தை சணமுகலிங்கம் அமைதிப்படுத்துவார். அது கூட ஒரு முக்கிய அம்சம். ஆகவே ஈழத்து தமிழ் நாடகம் என்று வந்தால் என்று வந்தால் அனைவரையும் ஒன்றாக்கிய பணியில் என்னைவிட குழந்தை சண்முகலிங்கத்தின் பங்குதான் மிகப் பெரி

யது.

☞ நாடகத்திற்கும் நாடகப் பயிற்சிக்கும் மரபுக் கலைகள் எப்படி உதவின?

● நாட்டுப்புறக் கலைகளை அதிகம் பேர் பார்ப்பதில்லை. அதனால் அவற்றை நாடகத்தின் ஊடாகப் பாதுகாக்கலாம் என, சில கட்டங் களை விவரிக்க கூத்து வடிவங்களைப் பயன்படுத்தினேன். உதார ணமாக 'புதியதோர் வீடு' நாடகத்தில் கூத்தையும் நாட்டுப்பா டல்களையும் பொருத்தம் கண்டு பயன்படுத்தினேன். ஏணித்தரு என் பது ஒரு முக்கியமான தீர்மானத்திற்கு முன் பாடப்படுகிற பாட்டு. அதை 'புதியதோர் வீடு' நாடகத்தில் பயன்படுத்தினேன். மட்டக் களப்பு, மன்னார், யாழ்ப்பாண கூத்துக்களையும், சிங்கள– கண்டிய நடனத்தையும் இணைத்து தேவைக்கேற்ப பலமான அரங்க வடிவை வெளிக்கொண்டு வந்தோம். அதன் தாக்கம் பழமைவாதிகளின் வாயை அடைத்தது. தமிழ் தேசிய நாடக வடிவம் உருவாக்க வேண்டும் என்ற ஆர்வம் தலை தூக்கியபோது, நாட்டுக்கூத்து, கிராமியக் கூத்து, கோலாட்டம், நாட்டுப்பாடல் வடிவங்கள் அடங் கிய 'பொறுத்தது போதும்' என்ற, நான் எழுதி வடிவமைத்த நாட கம் வந்தது. அது பாரதம் போன்ற காவியத்தைக்கூட தேவைப் பட்டால் ஒரு சிறிய அரங்கில் மேடையேற்றலாம் என்ற துணிச் சலை பல நாடக ஆசிரியர்களுக்கு கொடுத்ததாக கைலாசபதி போன் ற விமர்சகர்கள் சொன்னார்கள்.

☞ சரி; இனி லண்டனுக்குத் திரும்பலாம். லண்டனில் உள்ள தமிழர்களின் நிலை எப்படி இருக்கிறது?

● லண்டன் வாழ் தமிழர்களை ஐந்து வகையாகப் பிரிக்கலாம். இலங்கை பிரச்சினைக்கு முன் குடியேறியவர்கள் (பெரும்பாலும் டாக்டர்கள், இஞ்சினியர்கள், கணக்காளர்கள்), இந்தியாவிலிருந்து குடியேறிய தமிழர்கள் (தொழில் நிமித்தம்), மாணவர்களாகப் போய் அங்கே தங்கியவர்கள், அகதிகளாகப் போன– ஆங்கில அறிவு குறைந்தவர்கள், லண்டனில் பிறந்து, தமிழ் சற்று புரியக் கூடிய, ஆனால் பேசத் தெரியாத ஒரு இளம் பரம்பரை. இவர்களில்

அகதிகள் தீண்டத்தகாதவர்களாகக் கருதப்பட்டவர்கள். ஆனால் இவர்கள் மிகவும் கஷ்டப்பட்டு உழைத்து, பணம் சேகரித்து வாழத் துவங்கியுள்ளார்கள். தங்கள் பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்பிப் படிக்க வைக்கிறார்கள். அகதிகள் கடன் வாங்கியே மேலை நாடுகளுக்கு ஓடிப் போனதால், பதினெட்டு இருபது மணிநேரம் உழைக்கிறார்கள். நாட்டில், ஊரில், வீட்டில் மற்றவர்களுக்கும் உதவுகிறார்கள். இவ்வளவு சிரமங்களுக்கிடையில், தமிழ்நாட்டில் இருந்து கலைஞர்களை வரவழைத்து கௌரவிக்கிற தன்மையும் முயற்சிகளும் நடக்கின்றன. அதற்காகவும் தங்களது உழைப்பிலிருந்து ஒரு பகுதியை ஒதுக்குகிறார்கள். ஈழத்தில் அனாதை விதவைகளுக்கு ஒரு தொகையைக் கொடுக்க தங்களது கஷ்டங்களுக்கு இடையிலும் அவர்கள் தயங்குவதில்லை.

☞ ஈழத்துக்கும் தமிழ்நாட்டுக்குமுள்ள இலக்கியத் தொடர்பு எப்படி இருக்கிறது?

● தமிழகக் கலைஞர்களை ஈழத்திற்கும் வெளிநாடுகளுக்கும் வரவழைத்துக் கௌரவிக்கிறார்கள். ஈழத்தைச் சேர்ந்தவர்களின் நூல்களைப் பணம் கொடுத்து வாங்கக் காட்டும் ஆர்வம் தமிழகத்தில் இருப்பதில்லை. தமிழகத்தக் கலைஞர்களை, கதாசிரியர்களை ஈழத்துப் பத்திரிகைகளில் நாங்கள் காட்டுகிற அளவு இல்லாவிட்டாலும், ஓரளவுகூட தமிழகத்தில் ஈழத்துப் படைப்பாளிகளுக்கு வழங்கப்படுவதில்லை. கோமல், சுஜாதா, மாலன், வாசந்தி மற்ற சில சிறு பத்திரிகைகள் கொடுக்கிற அறிமுகங்கள்தான் எங்களுக்குக் கிடைக்கின்றன. ஆனால் இந்திய தமிழ் எழுத்தாளர்களை, கலைஞர்களை முழுமையாகவும் நிறைவாகவும் இனங்காணும் போக்கு ஈழத்திலேயும் சரி, வெளிநாடுகளிலும் சரி, இலங்கைத் தமிழர்களிடம் காணக் கூடியதாக இருக்கிறது.

☞ வெளிநாடுகளில் ஈழத் தமிழர்களை எப்படிப் பார்க்கிறார்கள்?

● அங்குள்ள மனிதாபிமான அமைப்புகள் இலங்கை அகதிப் பிரச்சினைகளை ஆராய்கிறார்கள். நுணுகிப் பார்க்கிறார்கள். இனி மூன்றாம் உலக நாடுகள் எங்களின் கலை இலக்கிய முயற்சிகளில் பங்கேற்கும்

வாய்ப்புகள் உள்ளன. சிறுகதை, நாடகங்களில் அதிகமாக எதிர் பார்க்க முடியவில்லை. ஆனால் கலைகள் மூலம், நாங்கள் காட்டுமி ராண்டிகள் அல்ல என்பதை காட்டக் கூடியதாக இருக்கிறது. அத னால் அங்குள்ள அனுதாபங்கள் கொண்ட அமைப்புகளோடு சேர்ந்து 'ஸ்ரீசலாமி' என்ற நாடகத்தை ஆங்கிலம், ஜெர்மன், தமிழ் ஆகிய மூன்று மொழிகளில் கருத்து சேரும்படி அமைத்தோம். அந்த நாட கம் ஸ்விட்சர்லாந்தில் 36 முறை மேடையேறியது. அதை ஒட்டி பத்திரிகைகளில் பெரிய அளவில் விமர்சனங்கள் வெளியாயின. எங்க ளின் அகதி வாழ்க்கைக்கான காரணங்களையும் ஆராய்ந்தன. ஜெர் மன் மொழி பேசப்படுகிற நாடுகளில் உள்ள ரீவி, ரேடியோ, பத்தி ரிகைகள் பேட்டி கண்டன. இப்படி நடப்பன ஒரு மாற்றத்தை ஏற்ப டுத்தாவிட்டாலும், ஐரோப்பாவிலே தமிழ் மக்கள் மீது சகிப்புத் தன் மையையும் அனுதாபத்தையும் ஏற்படுத்தியதாக பத்திரிகைகள் எழுதி ன. இப்படி ஒவ்வொரு நாடக தமிழ்க் கலைஞர்களும் அங்குள்ள அமைப்புகளுடன் சேர்ந்து ஈழத் தமிழ்ப் பிரச்சினைகளைச் சொன்ன தோடு, தமிழ் மக்களின் பொது கலைச் சிறப்பு ஆழங்களை, இந்தி யத் தமிழ்க் கலைஞர்களை வரவழைத்து அறிமுகம் செய்து, ஓர் அந்தஸ்தை அங்கீகாரத்தை ஏற்படுத்திக் கொண்டார்கள். படிப்படி யான ஒரு மனமாற்றம் எல்லா நாடுகளிலும் ஏற்பட்டு வருகிறது.

☞ ஈழத் தமிழர்கள் இந்தியத் தமிழர்களிடம் என்ன எதிர்பார்க்கிறார்கள்?

● எங்களின் உரிமைப் போராட்டத்தில் யாரும் பங்கேற்கத் தேவை யில்லை. நாங்களே பார்த்துக் கொள்கிறோம். எங்களுக்கு மத்தி யஸ்தம் செய்யவோ அல்லது வழி சொல்லித் தரவோ யாரும் எதிர் பார்க்கவில்லை. மனித உரிமை மறுக்கப்படுகிற மக்களுக்காக, சுதந் திரமாக வாழுகிற ஒரு இனம் தார்மீகக் குரல் எழுப்ப வேண்டும் என எதிர்பார்க்கிறோம். நாங்கள் அடக்கப்படுவது தவறு என்று சொல்லக்கூட தமிழ்நாட்டில் துணிச்சல் இல்லை. தெரிந்தோ தெரி யாமலோ ஈழத் தமிழர்களை உலக நாடுகள் சந்தோஷமாக அணைத்துக் கொண்டன. அரவணைத்தன. ஆனால் தமிழகம்தான் முதலில் அடித்து விரட்டியது. இது மிகவும் துயரமானது. இதை தமிழ் மக்கள் ஒரே குரலில் எதிர்க்காமல் இருப்பது அதிர்ச்சியைத்

தருகிறது.

☞ மீண்டும் நாடகத்திற்குத் திரும்பலாம். ஓர் அடிப்படையான கேள்வி. நாடக நடிகர்களுக்கு பயிற்சி ஏன்?

● என்னைப் பொறுத்தவரையில், நடிகர்கள் ஒரு மந்தைக் கூட்டம் மாதிரி வசனங்களை ஒப்புவிக்காமல், ஒவ்வொருவரும் தன் ஆளுமைக்கு ஏற்பவும் தேவைக்கு ஏற்பவும் பயிற்சி பெற வேண்டும். என்னுடைய பயிற்சியில் சத்திய உணர்வு இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறேன். அதாவது பொய்மையான அணுகுமுறை அறவே அகற்றப்பட வேண்டும். இதற்கு ஒரே வழி, நடிகன் தன் பலத்தை அறிந்து பலவீனங்களை அறிந்து தன்னைப் புரிந்து கொள்வது அவசியம். அதற்கேற்ப மூச்சுப் பயிற்சி, அசைவுப் பயிற்சி, சுயபிரக்ஞைப் பயிற்சி போன்றவற்றை முழுமையாக அவன் பெற வேண்டும். இப்படிப் பெறுகிற நேரம் அகங்காரம் அழிந்து போகும். எளிமை மேம்படும். அதிலிருந்து சிறப்பு உதயமாகும்.

☞ தமிழ் வழிப் பயிற்சி என்று சொல்கிறீர்களே; அது என்ன?

● உடலில் 'மூலம்' என்று நாம் எதைத் தமிழில் கூறுகிறோமோ, அந்த உறுப்பிலிருந்து நம் மூச்சைப் பிறப்பிக்கலாம் என்பதை உரர்த்துவது. தமிழில் மூலம் என்பதே அதன் அர்த்தத்தை உணர்த்துகிறது. மூலமும் உந்தியும் மூச்சாலும் தளர்வாலும் இணைக்கப்படும்போது, அந்த முக்கலில் விதானம் பலமடையும். அதிலிருந்து மூச்சையும் மன உறுதியையும் வளர்க்கலாம் என்பது சித்தர்கள் காலங்காலமாகச் சொல்லி வரும் உண்மை. இதை அடிப்படையாக வைத்து என் ஆய்வுகளை மேற்கொண்டேன். இதனால் உடலில் பல உள்ளார்ந்த நோய்கள்கூடக் குணமடைவதைக் கண்டோம். இப்போது தமிழகம் வந்த வேளையில் சில சித்த யோகிகளோடு உரையாடியபோது, தங்கள் மூதாதையர் இவற்றைக் கையாண்டதை அவர்கள் தெரிவித்தார்கள். மூச்சை அடக்குதல் தமிழ்நாட்டில் கால காலமாக நிலவுகிறது. முரட்டுத்தனமாக அல்லாமல் ஆரோக்கியமாக எப்படிப் பயன்படுத்துவது என்பதை ஐரோப்பிய நாடகப் பட்டறைக

ளில் உதாரண உபதேசங்களுடன் நிறுவி தமிழ் மக்களிடையே காலகாலமாக நிலவி வரும் உடல் கட்டுப்பாட்டை உறுதியாக மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்வதில் வெற்றி காணவும் முடிந்தது. மேலை நாட்டவர்கள் தங்கள் நாட்டின் நாடக முயற்சிகளில் புதுமைகளைப் பற்றிப் பேசும்போது, தமிழ் நாடக முயற்சிகளில் இவை எவ்வளவோ பழமையானவை என்பதை உதாரணங்களோடு எடுத்துக் காட்டி, அவர்களைத் திகைக்க வைக்கவும் முடிகிறது. ஆழமாக வேரோடிய தமிழனின் ஒரு கடுகளவு மூளையாக, மேற்கேயே இருந்து எங்கள் கருத்தை உணர்த்துவது எனக்கு மனநிறைவாக இருக்கிறது.

☞ எந்த மாதிரியான நாடக முயற்சிகளைத் தற்போது மேற்கொள்கிறீர்கள்?

● போரம் தியேட்டர் (Forum Theater) என்பதை முழுமையாகப் பயன்படுத்தினோம். பிறகு இன்விசிபிள், அதாவது கண்ணுக்குத் தெரியாத (Invisible Theater) அரங்கை எங்களின் வடிவத்தில் காட்டினோம். இப்போது இன்ஸ்டண்ட் தியேட்டர் என்கிற உடனடி அரங்கைக் கையாள்கிறோம். இதைப் பயிற்சி பெற்ற நடிகர்களைக்கொண்டு உடனே செய்ய முடிகிறது. உதாரணமாக, ஈழத்தில் ஒரு சம்பவம் நடக்கும்போது, கடிதம் மூலம் அதை அறிந்து நடிகர்களுடன் பேசி அன்றே தயாரிக்கிறோம். அப்படி தமிழகத்தில் இருந்து ஈழ மக்களை ஏற்றிச் சென்ற முதல் கப்பல் சம்பவம், அன்றே நடந்த கலைவிழாவில் 'களரி ஓர் அரங்க இயக்கம்' நடிகர்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டது. உடனே பிறந்த பாடலும் அந்த நாடகத்தில் இடம்பெற்றது. அது பெரிய பாதிப்பை ஏற்படுத்தியது. இது மாதிரிச் செய்யப்படும் 'உடனடி அரங்கு' ஒரு வளமிக்க நாடகக் குழுவின் எதிர்கால அரங்காக அமையும். ஆனால் பயிற்சி இல்லாமல் அதைக் கையாண்டால் குரங்கின் கை மாலையாக சீரழியும்.

☞ லண்டனிலிருந்து வந்து தமிழ்நாட்டில் இரண்டு மாதத்திற்கு மேல் இருக்கிறீர்கள். பல நாடகங்களைக் கண்டீர்கள். பல நாடகக் கலைஞர்களைச் சந்தித்தீர்கள். இங்குள்ள சூழல் எப்படித் தெரிகிறது?

● நான் தமிழ்நாட்டுக்கு வருவது முதல் முறை இது. இங்கு வருவதற்கு முன்பு நாடகம் பற்றி சே.இராமானுஜம், மு.ராமசாமி, ந.முத்துசாமி, ஞாநி, கோமல் சுவாமிநாதன் இப்படிப்பட்டவர்களின் எழுத்துக்கள்தான் எனது சாளரமாக இருந்தன. வந்த நாளன்றே நாடகவெளி நடத்திய நாடக விழா. அதில் முதல் நாளன்று முருக பூபதி என்ற, பாண்டி நாடகப் பள்ளி மாணவரின் 'சரித்திரத்தில் அதீத மியூசியம்' என்ற நாடகம் பார்த்தேன். அது ஒரு நெறியாட்சி சிறப்பமைந்த நாடகம். மறுநாள் வேலு சரவணனின் 'கொடியரளி' என்ற நேர்த்தியான நாடகத்தைக் கண்டேன். வேறொரு இடத்தில் பிரசன்னா ராமஸ்வாமி ஓர் அரங்க உணர்வோடு நெறிப்படுத்திய அம்பையின் சிறுகதையை மேடைப்படுத்திய நாடகம், பிறகு சென்னை கலைக் குழுவினரின் நாடகங்களை பகல் நேரத்தில் நூற்றுக்கணக்கானவர்களோடு ஓர் அலுவலகக் கூடத்திற்குள் கண்டேன். கட்டிடத்தின் வெளிப் பகுதியிலிருந்து மேடைக்கு நடிகர்களை மேள தாளத்தோடு அழைத்து வந்தார்கள். நடிகர்கள் ஓடி அனுபவித்து நடித்தார்கள். தாள லயம், ஒருவரோடு ஒருவர் இணைந்து ஊடாடிய விதம் ஆகியன ஒரு காத்திரமான வளர்ச்சியைக் காட்டியது. கல்வி அறிவு வகையில் அரசு அதிகம் அக்கறை எடுக்காத நாட்டில் சமூகப் பிரக்ஞையுடன் நாடகக் குழுக்கள், சமூகப் பிரச்சினைகளை மக்களிடம் எடுத்துச் செல்லும்போது, அதிலும் தெரு, சந்தைகளில் நடத்திக் காட்டும்போது, நாடகம் ஒரு சமூகக் கருவியாக அல்ல பலமான ஆயுதமாக மாறுகிறது. இதனால் நாடகத்திற்கு ஒரு கௌரவம் கிடைக்கிறது. பிறகு சென்னைப் பல்கலைக் கழகப் பேராசிரியர் டாக்டர் அரசு, மங்கை– இவர்களின் ஏற்பாட்டில் கீழ்பெருமாள் நல்லூர் என்ற குக்கிராமத்தில் முழு இரவு கூத்து பார்க்கச் சென்றேன். கூத்தின் ஆட்ட வடிவங்கள் என்னைத் திகைக்க வைத்தன. வட்டமும் சதுரமும் நட்சத்திரமும் குட்டிக் கரணமும் சுழல் கரணங்களுடன் கொண்ட அசைவுகள் பிரம்மாண்டமாக இருந்தன. இவற்றை நகர்ப்புறத்தினரும் பார்க்கும் வண்ணம், அதன் சிறப்பு– கட்டுக்குலையா வண்ணம் நேரத்தைக் குறுக்கி மேடையேற்றுகிறார்கள் இல்லை என்பது விசனத்தைத் தருகிறது. ஈழத்தில் பேராசிரியர் க.வித்தியானந்தம், சிவத்தம்பி,

மௌனகுரு மற்றும் பலர் செய்த பணியை, ந.முத்துசாமியும், மௌனக்குறம் நாடகம் படைத்து ஒரு புதுப்பாதை காட்டும் பல்கலை அரங்கமும் ஒரு சமுதாயப் பணியாகவும், ஒரு தமிழ்ப் பணியாகவும் நினைத்து ஏன் ஒன்றுபட்டு இயங்கக் கூடாது என்பது எனது மன்றாட்டமான கேள்வி. தமிழ் நாட்டில் இருந்து மேலை நாடுகளுக்கு வருகிற நாடகங்கள் என்று கூறப்படுபவை அரங்க உணர்வோ, ஒரு சீரான பாத்திரப்புனைவோ இல்லாமல், நட்டமரமாய் நடிகர்கள் நின்று நிகழ்த்தும் சிரிப்புத் தோரண வாந்திகள். தவறிப்போய் வெளிநாட்டார் அங்கு மேடையேறிப் பார்த்து, 'இவைதான் தமிழ் நாடகமா?" என்று எம்மைத் தலைகுனிய வைக்கும் சிறுமை நிலையில் துயரப்பட்டு இங்கே வந்தேன். தரமான நாடகங்களைப் பார்த்தேன். எனக்குள் ஒரு புளகாங்கிதம் உண்டாயிற்று. ந.முத்துசாமியின் கூத்துப்பட்டறை எதிர்கால நாடக முயற்சிக்கு ஒரு பெரிய வித்து என்றுதான் கருதுகிறேன். அதே சமயம், வெறும் களப் பயிற்சிகளை நடத்திக் கொண்டிருக்கும் கூத்துப்பட்டறை, உலக அரங்குக்கு எடுத்துச் செல்லும் வகையில் பெரிய தயாரிப்புகளிலும் ஈடுபட வேண்டும் என்பது என் அவா. அவர்கள் பயிற்சியை பொறுத்தவரை தொட்டந் தொட்டமாக நிறையப் பெற்றுள்ளார்கள். பார்ப்பதற்குப் பெருமையாக இருக்கிறது. காழ்ப்புணர்வற்ற ஒரு கவித்துவப் பொறாமையாகவும் இருக்கிறது. ஒரு நாடகம் நீண்டகால தயாரிப்பில் இருக்க வேண்டும் என்பது எனது பிடிவாதம். ஒரு முறையாக வளர்க்கப்பட வேண்டும். வெவ்வேறு நிலையிலுள்ள ஒரு கர்ப்பிணித் தாயைப் போல, கூத்துப்பட்டறையும் தகுதியானவற்றைத் தேர்ந்தெடுத்து சமகாலப் பிரச்சினைகளை, தமிழ் மரபில் வேரூன்றிய பல்வேறு கலை வடிவங்கள் மூலம் உலகுக்கு எடுத்துக் காட்டக் கூடிய வகையில், ஒரு நேர்த்தியான தயாரிப்பை உலகத்திற்குத் தர வேண்டும். உலகமெல்லாம் பரவி வாழும் தமிழர்கள், குறிப்பாக ஈழத் தமிழர்கள் அத்தகைய முயற்சிகளுக்கு நிச்சயமாக உலகெங்கிலும் மேடைகள் தருவார்கள். அதுவே எம் மொழிக்கும், தமிழ்ச் சமூகத்திற்கும் பெருமை சேர்ப்பதாக அமையும். அது எனது ஆவல்: நம்பிக்கையும் கூட.

(நன்றி: சுபமங்களா.)

# நாயன்மார் பதில்கள்



◈ ஐயா! வலியவந்து அறிவுரை கூறுபவர்கள் தமிழர்களிடையே அதிகரித்துச் செல்கிறார்களே?

✍ உண்மைதான். 'அறிவுரை' சொல்லியாலும் தமது மேதாவிலாசத்தைக் காட்டி, அதை ஒரு கௌரவமாகக் கருதி, தமக்குத்தாமே பெருமைப்பட்டுக் கொண்டு, குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டும் பலரைக் கண்டிருக்கிறேன். அவர்களது தாழ்வுமனப்பான்மையின் மனச்சுரண்டல் எனலாம்.

பல அறிவுரையாளர்களை சற்று நெருங்கிப் பார்த்தால், அவைக்கும் அவர்களுக்கும் துளிகூடச் சம்பந்தமில்லை என்பதுதான் உண்மை. பதிகளுக்காகவும் மேடைகளுக்காகவும் 'மைக்'குகளுக்காகவும் 'தரம்' எனும் முலாம் பூசும் போலிகள் தம்மையும் ஏனையவர்களையும் ஏமாற்றுவதற்காகக் கிளர்ந்தெழுவது புலம் பெயர்ந்த தமிழருள் ஏராளம்! ஏராளம்!! இவர்களின் தற்பெருமையோ தாராளம்! தாராளம்!!

◈ ஐரோப்பிய நாடுகளில் பிறந்த தமிழ்ப்பிள்ளை தனது ஏழாவது வயதில்; பொழுதுபோக்கு நேரங்களில் சிறுகதை எழுதுமா?

✍ மூன்று வயதில் மேடைகளில் ஏறி சொற்பொழிவாற்றியதைக் கண்டிருக்கிறேன். சில குழந்தைகள் மூன்று வயதில் காட்டிய திறமை பெற்றோருக்குப் போதுமென்றாகி விடுகிறது. புகழ்ச்சியில் மயங்கவைத்துப் பிள்ளைகளின் வளர்ச்சியை மழுங்கடித;துவிடுகிறார்கள். பிள்ளைகளின் திறமை வளர்வதற்கான சந்தர்ப்பத்தைப் பெற்றோர் அமைக்கத் தவறுவதால், இத்தகைய பிள்ளைகள் தமது ஏழு எட்டு வயதிற்குப் பின் தமது முந்தைய வீடியோக் கொப்பிகளைத் திரும்பத் திரும்பப் போட்டுப் பார்த்து ஏங்கி நிற்பதையும் காணக்கூடியதாக இருக்கிறது.

ஆனால் சிறுகதையைப் பொறுத்தவரையில்....?! ஏழு வயதுப் பிள்ளையின் எழுத்துக்கள் சிறுகதை என்றால், அவ்வாறு சொல்பவர்களுக்கு 'சிறுகதை' என்றால் என்னவென்று தெரியாமல் இருக்க வேண்டும்.

ஆனால் ஒன்று.... சில பிள்ளைகள் தமிழ் வானொலிகளில் பங்கேற்கும் 'இன்றைய நேயர்' போன்ற நிகழ்ச்சிகளில் பொழுதுபோக்காக 'சிறுகதை எழுது தல், கவிதை எழுதுதல்' என்று பெற்றோருக்காகச் சொல்லிக் கொள்கிறார்கள்.

ஆகவே இனி, சிறார்களுக்கு 'விளையாட்டுப் பொருட்கள்' வாங்குவதற்குப் பதிலாக, ஒரு 'பேப்பரும்' ஒரு பேனையும் வாங்கிக் கொடுக்கலாம்.... 'சிறுகதை' எழுதியே பொழுதுகளைப் போக்கிக் கொள்வார்கள்.

◈ கலையோசை காலாண்டு இதழாகத் தொடர்ந்து வருமா? கால தாமதத்திற்குக் காரணம் என்ன?

✍ ஒன்றா இரண்டா எடுத்துச் சொல்ல...?!

காகிதமும் கையில் பேனாவும் ஒரு கணனியும் இருந்துவிட்டால் அதோ டு இரண்டு பேரும் இருந்துவிட்டால், காலாண்டிதழ் என்ன.. ஒரு வாராந்த இதழாகவே பெயர் படுத்திக் கொள்ளலாம்.

வெறும் பெயர்மட்டும் பிரபல்யம் அடைவதால் இலக்கியம் வளருமா? தேடலுள்ள ஆக்கதாரர்கள் வேண்டும். கேட்டுப் படிக்க வாசகர்கள் வேண்டும். 'எழுத்து, இலக்கியம் என்றலையும் முட்டாள்கள்' என்று எம்மைத் திட்டாத மனமுள்ள மனிதர்கள் வேண்டும். இவர்களைத்தான் தேடிக் கொண்டிருக் கிறோம்.

நாம் தேடுபவர்களைச் சந்தித்துவிட்டால், கலையோசை காலாண்டு இதழா க அல்ல... மாத இதழாகவே வெளிவர நாம் உழைக்கத் தயாராக இருக் கிறோம்.

வினாவை முன்வைத்த விண்ணாணக்காரரே! நாம் தேடும் இவர்களில் யாரையேனும் சந்தித்தால் இரண்டு வார்த்தை காதில் போட்டு வையுமேன்.

ஆனாலும், இவர்களைச் சந்திப்பதற்காகவேனும், கலையோசை தொடர்ந்து ஒலித்தக் கொண்டிருக்கும்.

அடுத்த

## கலையோசையில்....!

- வானொலிக் குடும்பங்கள் பற்றி... நாயன்மார்!
- பிரபாமணாளனின்..... சிறுகதை!!
- கி.பி. அரவிந்தனின்.... கவிதைகள்!!!

# குடும்பம் ஒரு கதம்பம்

'சோழியான்'

வாழ வழியில்லை. உயிருக்கு உத்தரவாதம் தாருங்கள்' என்று வந்ததும், வந்த இடத்தில் கிடைத்த சிற்சில சலுகைகள் நிரந்தர இருப்புக்கான உத்தரவாத மாயையையும் நம்பிக்கைத் தோற்றத்தையும் ஏற்படுத்தியபோக்கில், வாழ்க்கையைத் தேட முற்பட்டுக் குடும்பங்களாகி எதிர்காலச் சந்ததிகளையும் கண்முன்னே கண்டு, அவற்றுக்கான தேவை நிவர்த்தித்தலுக்கு முகம் கொடுத்துத் தினமும் புதுப்புது வேலைப் பளுக்களுக்கும் உடல் உழைப்புகளுக்கும் உள்ளாகிச் சிறிது சிறிதாக உடல் செல்லரிக்கும் கூடாகத் தேயும்வேளையில் புதிதாக ஒரு பெரிய பிரச்சினை விசக் கிருமிகளாகக் குடும்பங்களுள் ஊடுருவி, கோயிலாக இருக்கவேண்டும் என்ற வாழ்த்தொலிகளுடன் உருவான குடும்பங்கள் பலதையும் குட்டிச் சுவராக்குவதை நோக்கும்போது, புலம்பெயர்ந்து தஞ்சமடைந்த தமிழனின் அடுத்த சந்ததியின் நிலை தமிழ்ப் பண்பாடு கலாச்சாரங்களுள் அடங்கிப் போகுமா என்பது கேள்வியாகிப் பலரையும் பயமுறுத்துவதை எவராலும் மறுக்கமுடியாது என்பது எனது எண்ணம்.

வீம்புக்காக வேண்டுமானால், 'நான் இளம்பொடியளையோ கண்ட நிண்டவங்களையோ குடிகாரங்களையோ ஜேர்மன் நண்பிகளுடன் திரிபவர்களையோ வீட்டுக்குக் கூப்பிடுறதுமில்லை... அடுக்கிறதுமில்லை... என்ரை பிள்ளையளை உதுகளுக்காலை விலத்தி வீட்டுக்குள்ளையே வைச்சிருக்கிறன்... அதுகள் என்ரை சொல்படிதான் நடக்கும்... வளர்க்கிறமாதிரி வளர்த்தால் அதுகள் எங்கடை முறைப்படிதான் வளரும்..' என்று பலரும் தம்பட்டமடிப்பார்கள். ஆனால் அவர்கள் வீட்டிலேயே வெளியாலிருந்து ஒரு சம்பவம் உள்ளே புகுந்து சங்காரம் செய்வதையும் பல நிகழ்வுகள் ஏற்கெனவே எடுத்தியம்பியிருக்கின்றன.

விசக் கிருமிகளாகப் பல குடும்பங்களை வேரறுத்துக்

கொண்டிருக்கும் பிரச்சனைகள் நாளுக்கு நாள் ஐரோப்பா நாடுகளில் வாழும் தமிழ்க் குடும்பங்களிடையே அதிகரித்து வரும் குடும்பப் பிரிவுகள்தான் என்றால் மிகையாகாது. அதுவும் தமிழ்ப் பெண்கள் குடும்பத்தைவிட்டு அவர்கள் தனித்து வாழ்வதற்கான விடுதிகளை நாடுவதும், மாற்றுத் துணைகளை நாடுவதும் அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

எனக்குத் தெரிந்த நண்பன் ஒருவன். வயது நாற்பதுக்குமேல் இருக்கும். மூன்று பிள்ளைகளின் தந்தை அவன். எல்லாத் தேவைகளையும் பணத்தின்மூலம் நிறைவேற்றலாம்— அதன்மூலம் வாழ்க்கை நினைத்தமாதிரி அமையும்— மொத்தத்தில் எதற்கும் பணமே பிரதானம் என்பது அவனது எண்ணம். அதனால் அந்த எண்ணத்தில் எழுந்த பணம் தேடும் நோக்கத்துக்காக ஓய்வின்றி உழைத்தான். சலிப்பில்லாமல் உழைத்தான். வேலை வேலை என்று வெளியிலேயே அலைந்து திரிந்தவனால் தனது குடும்பத்துள் எழுந்த மன உழைச்சல்களை உணர முடியவில்லைப்போலும்.

அவனது மனைவி தனது மூன்று பிள்ளைகளையும் அழைத்துக்கொண்டு ஒரு இருபது வயது வாலிபனுடன் புதுவாழ்வு தேடிச் சென்றுவிட்டாள். இத்தனைக்கும் அந்தப் பெண்ணுக்கும் அந்த வாலிபனுக்கும் ஆகக் குறைந்தது பதினைந்து வயது வித்தியாசமாவது இருக்கும். அவளது மூத்த மகனுக்கும் அந்த வாலிபனுக்கும் வயதில் சிறு வித்தியாசம்தான். பாவம் அந்த நண்பன். பணத்தில் வாழ்க்கையைக் காணலாம் என்று, உழைப்பே பணத்தைத் தந்து வாழ்வுக்கு ஒளியூட்டும் என்ற நம்பிக்கையுடன் பாடுபட்டவன் இன்று மனநோயாளியைப்போல நடைப் பிணமாகி விட்டான்.

அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் விசம் என்பார்கள். அளவை மீறியதுதான் அந்தக் குடும்பத்தின் குலைதலுக்கான காரணமா?! இத்தனைக்கும் அவர்கள் தாயகத்தில் திருட்டுத்தனமாகக் காதலித்து, சந்துபொந்துகளில் சந்தித்து, நாலு பேரின் விடுப்புக் கதைகளுக்கு ஆளாகி, ஊரில் பிரபல புதினத்தின் நாயகர்களாகி, பின்னர் பெற்றோரின் எதிர்ப்புகளுக்கு மத்தியில் திருமணமாகிப் புலம்பெயர்ந்து

வந்தவர்கள்.

ஆனால் தற்போது.... காதல் போய் காமம் விசுவரூபம் எடுத்து அந்தக் குடும்பத்தைக் கோர மாக்கிவிட்டது என்பதா?! அல்லது அந்தப் பெண்ணின் ஆசா பாசங்கள் அந்த முதுமையைத் தேடும் வயதில் எல்லைகளையும் கட்டுப்பாடுகளையும் பண்பாடு என்ற வேலிகளையும் துச்சமாக மதித்துக் குடும்பத்தைத் துவம்சம் செய்யத் துண்டினவா?!

'நான் பணத்தையா காதலித்தேன்? அவனை... அவனின் மனதை... அவனின் அழகை அல்லவா காதலித்தேன்... பணம் பணம் என்று ஆலாப் பறந்து கொண்டு... மனைவியோடை பிள்ளையளோடை நாலு வார்த்தை அன்பாய்க் கதையாமை... மனைவியைக் கவனிக்கவேணும் எண்ட சிந்தனை கொஞ்சங்கூட இல்லாமை திரிகிறவனோடு எப்படி வாழமுடியும்? இவன் வெளிநாடு வருவான்... ஆயிரக் கணக்கில் சம்பாதிப்பான் என்று எதிர்பார்த்தா காதலித்தேன்..' என்று அவள் தனது போக்குக்கான நியாயங்களை அள்ளிவிடலாம்.

ஆனால், அந்த மூன்று பிள்ளைகளின் எதிர்காலம்... அவளுடன் வாழ்வைப் பகிரவென்று இருபது வயதில் பருவ வெறியே வாழ்வுக்குப் போதும் என்ற முடிவில் புறப்பட்ட அந்த இளைஞனின் எதிர்காலம்... இப்படியான கேள்விகள் குறித்து எவ்வித நியாயங்களை முன் வைக்க முடியும்?

அந்நிய நாட்டில் வசதிகளும் வாய்ப்புகளும் குடும்பத்தின் தலைவனது பொருளாதார உதவியில் தங்கியிராது தனித்து வாழமுடியும் என்ற சட்டங்களும் தந்த உத்தரவாதத்தில் எழுந்த உற்சாகமான நம்பிக்கைதான் அவளது புதுவாழ்வுத் தேடலுக்கான வழி காட்டுதலாக இருக்கலாம். இத்தனையையும் மீறி, எடுத்ததற்கு எல்லாம் 'பெண்கள் அடக்கி ஒடுக்கப்படுகிறார்கள், நசுக்கப்படுகிறார்கள்' என்று மேடைகளிலும் சஞ்சிகைகளிலும் பத்திரிகைகளிலும் கோசங்கள் எழுப்பி, தவறான அணுகு முறைகளுடன் ஏதோ சொன்னால் சரி, எழுதிப் பக்கங்களை நிறைத்தால் போதும் என்ற போக்கில் செயற்படும், புத்திஜீவிகளாகத் தமக்குத்தாமே கணக்குப்போட்டுக் கொள்ளும் சிலரும்தான் இப்படியான குடும்பக் குலைதல்களுக்கு அறிந்தோ அறியாமலோ காரணமாகிறார்கள் என்

ற கருத்தும் ஏற்றுக் கொள்ளப்படவேண்டிய ஒன்று.

ஒரு ஆண் மதுவையும் புகையையும் நாடும் போது பெண்கள் ஏன் குடியையும் புகையையும் நாடக் கூடாது என்று கேட்பதோடு மட்டும் நின்றுவிடாது, தாங்கள் ஆண்களுக்கு எந்த விதத்திலும் குறைந்தவர்கள் அல்ல என்ற எண்ணத்தின் வெளிப்பாட்டால் தவறாக குடித்தல் புகைத்தல் போன்ற தீய பழக்கவழக்கங்களுக்கு உள்ளாகி, அடிமை விலங்கை உடைத்துவிட்டோம் என்றபோக்கில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் தமிழ்ப் பெண்களும் இங்கு இல்லாமலில்லை. இதற்குள் பல நாவல்களை எழுதிக் குவித்த, எழுதிக் கொண்டிருக்கிற ஒரு நாவலாசிரியை கூட அடக்கம் என்றால் நம்பத்தான் வேண்டும்.

இயற்கையானது ஆணுக்கென்று சில தன்மைகளையும் பெண்ணுக்கென்று சில தகமைகளையும் அளித்திருக்கிறது. இது மனிதப் பிறவிக்கு மட்டுமன்றி விலங்குகளுக்கும் ஊர்வனவற்றிற்கும் பொருத்தமானதாகவே அமைகின்றது.

ஆண் பலம் பொருந்தியவனாகவும் பெண் ஆணைக் கவர்ந்திழுப்பவளாகவும் படைக்கப்பட்டிருக்கிறாள்.

மலர்கள் பல வர்ணங்களைக் காட்டி தேனீக்களைக் கவர்ந்திழுக்கின்றன. தேனைக் கொடுத்து மகரந்தச் சேர்க்கைக்கு உட்பட்டுத் தமது இனத்தை விருத்திசெய்கின்றன. இது மனிதப் பிறவிக்கும் பொருந்தும். இந்தப் பொருத்தங்களை பெண் அடிமைத்தனம் எனத் தப்பாக அர்த்தம் செய்து கொண்டு, 'பெண்கள் எவ்வாறு கவர்ச்சிப் பொருளாகலாம்? பெண்களை கதைகளிலும் கவிதைகளிலும் எப்படி அழகுடையவர்களாகச் சித்தரிக்கலாம்? அவர்கள் என்ன ஆண்களுக்கான காட்சிப் பொருளா?" என்றவாறு கருத்துக்களில் வர்க்க உணர்வைத் துண்டுவோர்களின் செயற்பாடுகளில் மனம் மயங்கி வாழ்க்கையை நாசமாக்கிக் குடும்பத்தைக் குப்பையாக்குவோரையும் பரவலாகக் காணமுடிகிறது.

ஆண்களின் தவறுகளைத் தாங்களும்செய்து தமது சரிநிகர்த் தன்மையை நிலைநாட்ட முற்படும் பெண்கள், ஆக்கத்துக்கான செயற்பாடுகளில் தம்மை ஈடுபடுத்தும் ஆண்களுடன் போட்டியிட்டால்,

அது பல ஆரோக்கியமான விளைவுகளுக்கு வழிகோலும் என்பதில் சந்தேகமில்லை.

இன்னும் சில தமிழ்க் குடும்பங்களின் பிரிவுக்குக் காரணமாக அவர்களது அருகாமையில் வசிக்கும் தமிழ்க் குடும்பங்களின் மீதான கவனித்தல் ஏற்படுத்தும் பாதிப்பு அமைகிறது. அவர்கள் 'பென்ஸ்' காரில் பவனி வந்தால் இங்கேயும் அதற்கான தேவை வந்துவிடும். அயல்வீட்டில் ஒரு பொருள் புதிதாக வாங்கப்பட்டால் இங்கும் அதற்கான தேவை ஏற்பட்டுவிடும். 'உன்னால் மட்டும்தானா முடியும்? என்னாலும் முடியும்!' என்ற சவால் விடும் மனப்பான்மை உருவாக்கும் தேவைகள் இவை.

அயலாரைப் பார்த்து, அவர்கள் என்ன செய்கிறார்கள், எவ்வாறு வாழ்கிறார்கள், என்ன வாங்குகிறார்கள், யாருடன் பழகுகிறார்கள்— அவற்றையெல்லாம் தாங்களும் நகலெடுத்தாற்போல் செய்ய வேண்டும் என்ற நோக்கில் புதிது புதிதாக ஏற்படும் தேவைகளுக்காக கணவனும் மனைவியும் வாக்குவாதப்பட்டு, சுமூகமாகப் பழகுவதைவிடுத்து தங்களுக்குள்ளேயே ஒரு கண்ணுக்குத் தெரியாத திரையைப் போர்த்திக் கொண்டு வாழ்வார்கள். இப்படியாக எவ்வளவு காலத்துக்குத்தான் வாழ முடியும்?! ஒருவர் விட்டுக்கொடுத்தால்தானே குடும்பம் என்ற வண்டி சீராக ஓடும்?! விட்டுக்கொடுப்புகள் அயலானைப்போல வாழ முற்படும் ஆசையை விட்டுக்கொடுக்காத விட்டுக்கொடுப்புகளோடு வாழ்வை தொடருவதைத்தான் பல குடும்பங்களில் காணக்கூடியதாக உள்ளது.

கடனைப்பட்டாவது புதிது புதிதாக ஏற்படும் தேவைகளை நிறைவேற்றி அயலானைப்போல் வாழ முற்படுவார்கள். கடன் வட்டி போடும். வட்டி குட்டி போடும். பிரச்சினை புதிய வடிவில் கடன், வட்டி, குட்டி என்ற போர்வையில் மீண்டும் குடும்பத்தில் குழப்பம் விளைக்கும் சதியில் ஈடுபட ஆரம்பித்துவிடும்.

ஒருவர் இருபத்தையாயிரம் மார்க் பெறுமதியான ஏலச் சீட்டுக் கட்டினார். மாதம் ஆயிரம் மார்க் கட்டுக்காசு. அவசர அவசரமாக பத்தாயிரம் மார்க் கழித்து சீட்டை எடுத்தார். அதாவது கிட்டத்தட்ட பதின்னாலாயிரம் மார்க் கைக்கு வந்தது. அந்தத் தருணத்தில் அவரது தேவை

களை நிறைவேற்ற அந்தப் பணம் அவருக்குப் போதுமானதாக இருந்தது.

தேவை அதி முக்கியமோ அல்லது அவசரமானதாகவோ இல்லை என்பதுதான் முக்கியமான விடயம்.

கிடைத்த பணத்தை வீட்டுக்குப் புதுத் தளபாடங்கள் வாங்குவதற்காகச் செலவளித்தார். ஏனெனில் அவரது உறவினர் ஒருவர் தான் புதிதாகச் சென்ற வீட்டுக்குப் புதிய தளபாடங்களை வாங்கியமைதான்.

பணம் வெகுவிரைவில் கையைவிட்டுப் பறந்துவிட்டது.

சீட்டுக் காசு கட்டவேண்டும். மாத வருமானம் சீட்டுக் காசு கட்டப் போதுமானதாக இல்லை. மாதாமாதம் வட்டிக்குக் காசு வாங்கிச் சீட்டுக் காசு கட்டலானார். முடிவில் அந்த இருபத்தையாயிரம் சீட்டால் இவர் இன்று மீள முடியாத கடனாளியானதுதான் கண்ட மிச்சம்.

தற்போது குடும்பத்தில் நிம்மதியில்லை. எடுத்ததுக்கு எல்லாம் கணவனுக்கும் மனைவிக்கும் இடையே வாய்ச் சண்டை. பிள்ளைகள்தான் பாவம். பெற்றோரிடம் கனிவைக் காணமுடியவில்லை. எந்தநேரம் பார்த்தாலும் கீரியும் பாம்புமாகச் சண்டையிடும் பெற்றோரின் மத்தியில் சிக்கித் தவித்து, மனதளவில் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

புதிதாக வாங்கி வடிவு பார்த்துப் பெருமைப்பட்டுக் கொண்டிருந்த தளபாடங்கள்கூடப் பழசாகிக் கொண்டிருந்தன.

விரைவில் அந்தக் குடும்பத்திலும் பிரிவு ஏற்படாது என்று கூறுவதற்கில்லை.

புலம்பெயர்ந்த நாட்டில் அற்ப விசயங்கள்கூடப் பூதாகரமாகப் பெருத்துப் புதுப்புதுப் பிரச்சினைகளுக்கும் பிளவுகளுக்கும் காரணமாகிக் கொண்டிருக்கையில், குடும்பங்களில் ஏற்படும் பிளவுகளுக்கும் அற்ப ஆசைகளும் மோகங்களும் அறியாமைகளுமே முக்கிய காரணிகளாக அமைகின்றன.

ஜேர்மனியில் நான் அறிந்த வரையில், தமிழ்க் குடும்பங்களின் பிரிவுக்கோ சிதைவுக்கோ பெண்களே முன்னணியில் நிற்கிறார்கள் என்பது எனது தீர்மானம். ஆனால் இந்தப் பிரிவுகளுக்கும் சிதைவுகளுக்கும் காரணமாகும் பெண்களைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்துவதல்ல எனது நோக்கம்.

இவர்களது இந்த நிலைக் கான காரணிகளைப்பற்றிய விச யங்களை முன்வைப்பதே எனது நோக்காகும்.

எமது தாயகத்தில் நிகழும் போராட்டத்தினால் நிதமும் ஏற் படும் அவலங்களும் அழிவுக ளும் கணக்கற்றவை. போராட் டத்தைக் கொச்சைப்படுத்துவ தற்கும் தமது நிலைக்கோ அல்லது தாம் சார்ந்த குழுக்க ளுக்கோ வக்காலத்து வாங்குவ தற்கு முயற்சிப்பவர்கள் போராட் டத்தின் முக்கியத்துவத்தை விட்டுவிலகி, அழிவுகளையும் அவலங்களையும் முன்னிறுத்தி போராட்டமே கூடாதென்பார்கள்.

ஒரு போராட்டம் என்றால் எவ்வாறு அழிவுகளும் அவலங் களும் அங்கே தவிர்க்க முடியா ததாகிறதோ, அவ்வாறே பெண் கள் விழித்தெழுந்து தமது ஒடுக்குமுறைகளுக்கு எதிராகக் குரல் கொடுத்து முன்வரும் போது, குடும்பங்களிலே பிரிவு களோ சிதைவுகளோ ஏற்பட வாய்ப்புண்டாகிறது. இதனாலே யே புலம்பெயர் நாடுகளில் வாழும் தமிழ் குடும்பங்களின் பிரிவுகளுக்கும் சிதைவுகளுக் கும் பெண்களே முன்னிற்கிறார் கள் என்றேன்.

அதாவது புலம்பெயர் நாடுக ளில் வாழும் தமிழ்ப் பெண்களில் பலர், இங்குள்ள சமூக பொருளா தார சட்ட வசதிகள் கொடுக்கும் பக்கபலத்துடன் தமது உரிமைக ளையும் சுயகௌரவத்தையும் நி லைநாட்டுவதற்காக ஆண்களின் அடக்குமுறைகளிலிருந்து வெளி வரத் துணிந்துவிட்டார்கள்.

ஆனால் இவர்களின் விழித் தெழலும் போராட்டங்களும் சரி யான வழிகளில் முன்னெடுக்கப்ப டுகின்றனவா என்று நோக்கி னால், 'ஓம்' என்று ஒத்துக்கொள் ள முடியாதவாறு எனது அனு பவங்கள் அமைகின்றன.

தாயகத்திலே பெரும்பாலான ஆண்கள் பெண்களை வீட்டு வே லையாட்களாகவும் படுக்கை அ றைப் பாவைகளாகவும் மட்டுமே நடாத்தினார்கள் என்பது உண் மையானால், அந்தப் போக்கே புலம் பெயர்ந்து அடைக்கலம் தேடிய நாடுகளிலும் பொதுவாகக் காணக் கூடியதாக உள்ளது. ஆனால் ஒரு சிறு வித்தியாசம்.... தாயகத்திலே வெறுங் கால்களால் அடக்கிய ஆண்கள் இங்கே சப்பாத்துக் கால்களால் அடக்கு கிறார்கள் என்பதுதான் அது.

தாயகத்திலே தமக்கேற்படும் அடக்குமுறை தாங்காது அல்ல

து அது அடக்குதலென்ற உணர்வே இன்றி உறவுகளுக்கிடையே உதவி கோரிக் கூக்குரல் எழுப்பிய தமிழ்ப் பெண்கள் பலரும் இங்கு நான்கு சுவர்களுக்குள் முடக்கப்பட்டவர்களாய் எவரை நோக்கிக் கூக்குரலிடுவதென்றே தெரியாத இயலாமையுடன் வாழ்கிறார்கள் என்பதுதான் கண்கூடு.

ஆனால் இந்தக் கட்டிடங்களுக்கு இடையில் அகப்பட்டுள்ள குமுறல்களும் கூக்குரல்களும் எவ்வளவு காலத்துக்குத்தான் இவ்வாறே நிகழ முடியும்?! வானொலிகள் பத்திரிகைகள் என்று புலம்பெயர் நாடுகளில் தமிழ் ஊடகங்களின் வளர்ச்சி வெகுவேகமாக நடைபெறும்வேளையில், அவை வீடுதேடி வந்து கட்டடங்களுக்கு உள்ளால் புகுந்து பெண்ணியம்பற்றிய கருத்துக்களை சரியாகவோ தப்பாகவோ தூவும்போது, அடக்குமுறைகளுக்கு எதிராக உலகின் மூலை முடக்கிலுள்ள பெண் சமூகம் பல வழிகளிலும் தனது சுய இருப்புக்கான முன்னெடுப்புகளுக்காக விழித்தெழும் காலகட்டத்தில், தமிழ்ப் பெண்கள் சமுதாயம்மட்டும் பண்பாடு கலாச்சாரம் என்ற கட்டுப்பாடுகளுக்குக் கடமைப்பட்டவர்களாய் எவ்வளவு காலத்துக்குத்தான் முகமிழந்தவர்களாய் வாழமுடியும்?! அதை எவ்வாறு ஆண்கள் காலங்காலமாகப் பெண்களிடமிருந்து எதிர்பார்த்து தமது அற்ப சொற்பத் தேவைகளை நிறைவேற்ற இயலும்?!

உலகத்தின் போக்கைப் புரிந்துகொண்டவர்கள், சூழலின் சாதகங்களைத் தெரிந்து கொண்டவர்கள், தமது திறமைகளைப்பற்றிய உணர்வு வரப்பெற்றவர்கள் ஆண்களின் ஆதிக்கத்துக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கப் படியிறங்க வெளிக்கிடும்போது, அங்கே உற்பத்தியாகும் பொறியானது தீயாகப் பரவ ஆரம்பித்த தோற்றம்தான் புலம்பெயர்ந்த நாடுகளில், அதுவும் நான் அறிந்தவரையில் ஜேர்மனியிலே பரவலாக ஆங்காங்கே தமிழ்க் குடும்பங்களிலே பிரிவாகவும் சிதைவாகவும் தெரிகிறது. இந்தத் தெரிதலானது திடீர் வீக்கமோ என்ற எண்ணம் எற்படுவதும், இந்தப் போக்குகள் சரியான ரீதியில்தான் செல்கின்றனவா என்ற கேள்வியும் விமர்சனங்களும் என்னுள் நான் சந்திக்கும் முழுவியளங்கள் ஏற்படுத்துவதும் தவிர்க்

கமுடியாத வியளமாகும்.

திருமதி நந்தினி, நண்பர்களுக்கு முன்னே தனது கணவனை மட்டம்தட்டிக் கதைப்பதிலும், மிரட்டுவதிலும் அலாதியான சந்தோசம் அவருக்கு.

பாவம் கணவன், மனைவியின் பேச்சுக்கும் ஏச்சுக்கும் எதிர்வார்த்தை கூறாமல் சிரித்துக்கொண்டே இருப்பார். 'என்ன இப்படி மனைவிக்குப் பயந்தவராக இருக்கிறாரே' என்று சக ஆண்கள் முணுமுணுப்பதைக் கேட்டாலும்கூட எவ்வித உணர்ச்சிகளையும் காட்டாமல் மௌனமாக இருப்பார்.

இத்தனைக்கும் அவரைக் கையாலாகாதவர் என்று கூறுவதற்கில்லை. நல்ல வேலை செய்கிறார். நன்றாகச் சம்பாதிக்கிறார். சம்பாதிப்பதை அப்படியே மனைவியின் கைகளில் கொண்டுவந்து கொடுத்துவிடுகிறார். அதன் பிறகு அந்தப் பணத்தைப்பற்றி அவர் கவலைப்படுவதில்லை.

'எனது வீட்டுக்கு வந்து பார். ஆணாதிக்கம், பெண்ணடிமை என்ற பேச்சுக்கே இடமில்லை.'

இது நந்தினியின் குரல். கணவன் எதுவும் பேசமாட்டார், பேசினாலும் அடக்கிவிடலாம் என்ற துணிவில் சீட்டுக் கட்டினார். மோசம் போனார்.

எல்லாரும் சொந்தத் தொழில் செய்கிறார்களே— நாங்கள் மட்டும் ஒதுங்கி இருக்கலாமா என்ற போக்கில் சொந்தத் தொழில் தொடங்கினார். எக்கச்சக்கமான கடன்.

இப்போது நந்தினியின் குடும்பம் மீளமுடியாத கடனில்....

'தனக்கெடாத் தொழில் தன் பிடரிக்குச் சேதம்' என்பதுபோல இந்நாட்டு மொழி அறிவு சிறிதளவுமின்றி, சுயமாகத் தொடங்கிய தொழிலில் முன்னனுபவம் துளிகூட இல்லாமல், மற்றத் தமிழன் சொந்தமாகத் தொழில் செய்யும்போது தான் ஏன் செய்யமுடியாது என்ற அசட்டுத் தைரியத்திலும் வீம்பிலும் சொந்தத் தொழில் தொடங்கிய நந்தினி தனது குடும்பத்தின் மீளமுடியாத கடனுக்குக் காரணமானாலும், நந்தினியின் கணவன் என்னவோ எப்போதும்போலத்தான் அமைதியாக, நந்தினி என்ன செய்தாலும் 'ஆமாம்' போடுபவராக இருக்கிறார்.

தானுண்டு, தன் வேலையுண்டு என்ற போக்கு அவருடையது. பணத்தை வைத்து நிர்வா

கம் செய்வது நந்தினியின் பொறுப்பு. பணம் எப்படி, எங்கே போகிறது என்ற பேச்சுக்கே அங்கே இடமில்லை.

இதை அவரது தப்பித்தல் என்பதா? அல்லது நந்தினியின் ஆணடிமைத்தனத்துக்கு எதிரான முன்னெடுப்பு என்பதா?

கோயிலாக இருக்கவேண்டிய குடும்பம் கடனுடன் சடமாக இயங்கிக்கொண்டிருக்கிறது என்பதுதான் உண்மை.

இருவரும் சேர்ந்து வாழ்வதுதான் வாழ்க்கை. அதிலே பிடிவாதங்களும் விட்டுக்கொடுப்புகளும் நிறைந்திருக்கும். சண்டைகளும் சமாதானங்களும் மாறிமாறி வரும். இன்பமும் துன்பமும் எதிர்பாராமல் நிகழும். இதுதான் சாதாரண சுவாரஸ்யமான வாழ்க்கை என்றாகும் போது, சலனமில்லாத வாழ்வு வாழ்க்கையாகவா இருக்கும்?!

யாவற்றிலும் இருந்து ஒதுங்கி இருந்தாலே பிரச்சினை இல்லை என்று வாழும் ஒருவர்! அதைத் தனக்குச் சாதகமாக்கி, அதுதான் பெண்களுக்கான சமத்துவம் என்று பெருமையுறும் இன்னொருவர். இங்கே சமத்துவமா நிலவுகிறது?!

சமத்துவத்துக்குச் சமாதானம் சொல்லப்படுகிறது.

பிரான்ஸில் ஒரு பேச்சாளப் பெண்மணி. மேடைகளிலே பட்டிமன்றங்களிலே கவி அரங்குகளிலே இவரை அடிக்கடி பார்க்கலாம்.

பேச்சிலே மூச்சுக்கு மூச்சு பெண்விடுதலை, பெண்சமத்துவக் கருத்துக்கள் போன்றவைகளே சரமாரியாக வெளிப்படும்.

மேடைகளில் ஆண்களைத் தாக்கோ தாக்கென்று தாக்குவார். அவரது கணவன் முன்வரிசையில் இருந்து இரசித்துக் கொண்டிருப்பார்.

விழாக்களுக்கோ கூட்டங்களுக்கோ அவர் வரும்போது பொட்டு வைக்கமாட்டார். சேலை கட்டமாட்டார். கூந்தலை அழகாக வாரிவிடமாட்டார். இத்தனையும் ஏன்?! தாலிகூட அணியமாட்டார்.

இவைகளை அணிவது பெண்ணடிமைத்தனம் என்பதும், தான் அடிமையாக இல்லை என்பதும் அவரது எண்ணம்.

பெண்ணியம் பேசுவோர் மத்தியிலே பண்பாடுகளும் கலாச்சாரங்களும் பெண்கள்மீது சுமத்தப்பட்ட அடக்குமுறைகள் என்ற கருத்து பரவலாக ஏற்கப்படுவதைப் பல

ரும் அறிவார்கள்தானே?!

ஒருநாள் ஒரு திருமண வைபவம் ஒன்றுக்குச் சென்றிருந்தேன்.

எதிர்பாராத வியப்பு.... அந்தப் பேச்சாளப் பெண்மணியா அவர்...?!

கழுத்துக் கைகள் எல்லாம் தங்க நகைகளால் நிறைந்து, பட்டுக் காஞ்சிபுரத்தில் பொட்டும் பூவுமாக, தமிழ் பண்பாடு கலாச்சாரங்கள் பிரதிபலிக்க அலங்காரமாகக் காணப்பட்டார்.

திருமண வைபவம் அவரை மாற்றிவிட்டதா? அல்லது திருமண வீட்டில் பெண்ணியக் கருத்துக்களை நுழைக்க கூடாது என்று நினைத்துவிட்டாரா?

பரவாயில்லை... அவரது உண்மை நிலை இப்போதாவது தெரிந்துவிட்டதே என்ற எண்ணம் எனக்கு. ஆனால் ஒன்று...!

அவர் மேடையில் போட்டது வேசமா? அல்லது அந்த திருமண வீட்டில் ஏற்றது வேசமா என்பதுதான் விளங்கவில்லை.

வானொலிகள் பத்திரிகைகளை எடுத்துக் கொண்டால், பெரும்பாலான பெண்கள் ஆண்களை எதிரிகளாக நினைப்பதையே அவர்களது கருத்துக்கள் இயம்புகின்றன. ஆண்களைக் கண்ணை மூடிக் கொண்டு எதிர்ப்பது எல்லாம் பெண்ணியம் என்ற கண்மூடித்தனமான போக்கே பெரும்பாலாகக் காணப்படுகிறது.

இதை உணராத பலர் இக் கருத்துக்களில் தமது சுய சிந்தனைகளை இழந்தவர்களாய் தமது குடும்பத்தையும் அதன் நிம்மதியையும் சிதைக்கிறார்கள் என்பதுதான் எனது அனுபவம்.

பல பெண்கள் பெரும்பாலும் ஆண்கள் சீதனம் வாங்குவதை கேவலமாகவும் கொடுமையாகவும் கூறுகிறார்கள். ஆனால் சீதனம் வாங்குபவர்கள் ஆண்கள் என்பது எவ்வளவுதூரம் உண்மையானது? பெண்கள் ஆண்களுக்குச் சீதனம் கொடுக்கிறார்கள் என்பது எவ்வளவுதூரம் உண்மை? பெண்கள் ஆண்களுக்கல்ல, ஆண்களின் பதவிகளுக்கும் அந்தஸ்துகளுக்குமே சீதனம் தருகிறார்கள் என்பதுதான் உண்மை.

எத்தனை பெண்கள் தமக்கும் குறைவான படிப்பறிவுள்ள, வசதியில் குறைந்த ஆண்களைத் திருமணம் செய்ய முன்வருகிறார்கள்? இதைப்பற்றி எவராவது சிந்திக்கிறார்களா?

ஐரோப்பியநாட்டுப் பெண்

களை ஒரு உதாரணத்திற்காக எடுத்துக்கொண்டால், அவர்கள் எந்தத் தகுதியை... வசதியை எதிர்பார்த்து ஒரு வெளிநாட்டவனைத் திருமணம் புரிகிறார்கள்? அவர்கள் தமது வாழ்க்கைக்கு ஒரு ஆண் துணை தேவை என்ற ரீதியிலேயே செயற்படுகிறார்கள். ஆனால் எமது தமிழ்ப் பெண்கள் தமக்கும் பார்க்க வசதியான ஆணைத் தேடி, அந்த வசதிகளுக்கும் திறமைகளுக்கும் சீதனத்தை அவற்றுக்கேற்ற அடிப்படையில் கொடுத்து, தமது வாழ்க்கையைத் தெரிவுசெய்துவிட்டு, பின்னாட்களில் அந்தச் சீதனத்தைக் காரணம் காட்டியே பெண் விடுதலை என்ற பெயரில் ஆண்களைக் குற்றவாளிகளாக்கி தமது வாழ்வைச் சீரழிப்பதை எவ்வாறு நியாயப்படுத்த முடியும்?

ஆனால் இதுதான் இன்று நியாயமாக பத்திரிகைகளிலும் வானொலிகளிலும் உலாவருவது வேடிக்கையான வேதனையாகும்.

சிவகாமி கவிதை எழுதுவதில் திறமைசாலி. வானொலிகளிலும் பத்திரிகைகளிலும் கவிதை என்ற பெயரில் ஆண்களை தமிழ் வார்த்தைகள்மூலம் காறி உமிழ்ந்துகொண்டிருப்பார்.

ஆண்கள் யாவருமே தனது பரமவைரிகள் என்பதுபோல அவரது எழுத்தும் வார்த்தைகளும் தணலாகக் கொதிக்கும்.

ஒருநாள் அவரைக் கேட்டேன்...

'சகோதரி, உங்களுடைய பிறந்த வீட்டிலோ புகுந்த வீட்டிலோ ஏற்பட்ட தாக்கமா இது?"

கேட்டதும் சொன்னாரே ஒரு பதில்!

அவரின் பிறந்தகத்திலோ புகுந்தகத்திலோ அப்படியான ஆண்கள் இல்லையாம். ஆனால் ஏனைய ஆண்கள் யாவருமே பெண்களை அடக்குபவர்களாம். எப்படி இருக்கிறது?!

இவ்வாறு பல பெண்கள் தமது கீழ் நிலைகளையும் குறைகளையும் மறைத்து, அதை மற்றவர்கள்மீது சுமத்தித் திருப்தி காணும் போக்கே பெரும்பாலும் காணப்படுகிறது.

இதனால் என்ன பலன்?

ஆக்கம் ஏற்படுவதற்குப் பதிலாக குடும்பங்கள் உருக்குலைவது மட்டுமன்றி, அவர்களின் வாரிசுகளும் இதற்குள் உட்படுத்தப்பட்டு, மன உழைச்சல்களுடன்

மனநோயாளிகளாகி எதிர்காலத்தை தொலைக்கக்கூடிய நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள்.

ஒன்று உருவாக வேண்டுமானால் போராடும் குணம் அவசியம். போராடும் நோக்கத்திற்கு மனத் தைரியமும் தொலைநோக்கும் தியாக மனப்பான்மையும் அவசியம்.

புதிதாக ஒரு வேலையைச் செய்யும்போது உடல் வலிக்கும். ஆனால் அந்த வேலையைத் தொடர்ந்து செய்யும் போது உடல் வலிக்காது. தொடர்ந்து செய்யக் கூடியதாக இருக்கும். இங்கே உடலானது தன்னை அந்த வலிக்குப் பழக்கப்படுத்திக் கொள்கிறது என்பதுதான் உண்மை.

அதைப்போல, பெண்ணின் உரிமைகளுக்காகப் போராட முற்படும்போது குடும்பத்திலிருந்தும், வாழும் சமூகத்திலிருந்தும் பாதிப்பு என்ற வலி ஏற்படும். ஆனால் அந்த வலி என்ற பாதிப்பைத் தாங்கிக் கொள்ளும் மனத் தைரியமும் தியாக உணர்வும் இருந்தால், காலப்போக்கில் அந்தப் போராட்டம் நிச்சயமாக வெற்றிபெறும்.

இதைவிடுத்து, உதட்டளவில் பெண்களுக்காகச் செய்கிறோம் என்று வெளிக்கிட்டுத் தம்மையும் ஏனையவர்களையும் ஏமாற்றிக் கொண்டிருப்போரும் இந்தப் புலம்பெயர்ந்த நாடுகளில் தமிழ்க் குடும்பங்களில் ஏற்படும் பிரிவுகளுக்கும் சிதைவுகளுக்கும் காரணமானவர்கள் என்பதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

அதே நேரத்தில் குடும்பங்களின் பிரிவுகளுக்கு இன்னொரு முக்கிய விசயத்தையும் கூறாமல் இருக்க முடியாது.

இருபத்தோராம் நுற்றாண்டில் காலடி வைத்து, மிலேனியத்தை வரவேற்றவேளையிலும் மதமாற்றங்களால் ஏற்படும் குடும்பப் பிளவுகளையும், அதன் பாரதூரமான தாக்கங்களையும்பற்றி எழுதாமல் இருக்க முடியுமா?

எனக்கு நன்கு தெரிந்த ஒரு தமிழர், ஜேர்மனியில் பிரபலமான 'எலக்ரோனிக்' உபகரணங்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலையிலே நல்லதொரு பதவியில் இருந்தார்.

மனைவிக்கு 'சுவிசேக சபை' என்று தாளம்தட்டி உருவாடி 'தேவனைக் கண்டேன்' என்று 'அன்னிய பாஷை'யிலும் அவ்வப்போது பிரார்த்தனையின்போது கதைத்துக்கொள்ளும் சில தமி

மூரது அறிமுகம் கிடைத்தது.

மனைவி அந்தச் 'சபை' யின் பிரச்சாரத்துக்கும் போதனைகளுக்கும் அடிமையாகிவிட்டார்.

கணவனுக்கு அவரது போக்கும் மாற்றமும் பிடிக்கவில்லை. குடும்பத்தில் சண்டை சச்சரவுகள் ஏற்பட ஆரம்பித்தன. கலகலப்பான குடும்பம் கூச்சலும் குழப்பமும் நிறைந்த குப்பையாகியது.

அன்றாட வாழ்வு அல்லோலமாகியது.

அன்பு பாசங்கள் எல்லாம் அகலக்கால் வைத்து அப்பால் ஓடி ஒழிந்துகொண்டன.

அந்தக் குடும்பத் தலைவருக்கு இதற்கெல்லாம் பரிகாரமாகப் புலப்பட்ட வழி 'வன்முறை' என்றால் பொய்யில்லை. அவரது மனைவியின் போக்கை மாற்றலாமென்ற நம்பிக்கையுடன் அடிதடியில் இறங்கினார்.

வீடுதேடி வந்த 'சபை' ஆட்களை அடிக்காத குறையாக விரட்டினார்.

பாவம் அவர். இப்படியான 'சபை'களுக்கு பொருளாதார உதவிகளுடன்கூடிய சகல வசதிகளுக்கும் பக்கபலமாக, அஸ்திவாரமாக, ஆணிவேராகப் பின்னணியில் பெரியசக்திகள் இருக்கும் என்பதை அவர் எதிர்பார்க்கவில்லை.

அவருக்கு 'விசர்' என்ற பட்டம் சூட்டப்பட்டது.

மனநோயாளர் வைத்தியசாலைக்கு பலாத்காரமாகக் கொண்டு செல்லப்பட்டார்.

அவரது வார்த்தைகளோ நியாயங்களோ அங்கே எடுபடவில்லை.

கடவுள் கண்களை இறுக மூடிக் கொண்டார்.

சிகிச்சை என்ற பெயரில் ஊசி மருந்து செலுத்தினார்கள்.

அதையடுத்து தொழிற்சாலையில் அவர் பதிவேடுகளில் எல்லாம் தமிழில் எழுதத் தொடங்கிவிட்டார்.

அதனால் அவர் மனநோயாளியேதான் என்பது சந்தேகமறத் தீர்மானமாகி, பதவியில் இருந்து விலத்தப்பட்டார்.

இன்று அவர் உண்மையாகவே மனநோயாளியாகிவிட்டார்.

அந்த நோயால் அவர் ஒரு உணர்ச்சிகளற்ற நடைப்பிணமாக மனைவியின் பின்னால் நடமாடுகிறார்.

மனைவி சொற்படி ஒரு இயந்திரப் பொம்மையைப் போல தன்னைச் சுற்றி என்ன நடை

பெறுகிறதென்று அறியும் ஆற்றலின்றி அலைகிறார்.

மனைவியுடன் தவறாமல் அந்தச் 'சபை'யின் கூட்டங்களுக்குச் செல்கிறார்.

அந்தச் 'சபை'க் கூட்டங்களிலே அந்தக் குடும்பமே விசுவாசத்துள் வந்ததாக அறிக்கையிடப்படுகிறது அந்தப் பொம்மை மனிதரின் வரவு கடவுளின் ஆட்கொள்ளலுக்கு அத்தாட்சியாக்கப்படுகிறது.

ஆக, இரட்சிப்பு என்பது அந்தக் குடும்பத்தின் குழப்பத்தில் ஆரம்பமாகி, அந்த குடும்பத் தலைவனின் 'மனநோயில்' வந்து நிற்கிறது.

இன்று அந்தக் குடும்பமானது ஒரு பெண்ணில்தான் தங்கி இயங்குகிறது. இரு சோடிக் கரங்களிலே உற்சாகமாக இயங்கவேண்டிய இல்வாழ்வு ஒரு பெண்ணின் கரங்களாலேயே தாங்கப்பட வேண்டிய நிலையில் தற்போது.

அந்தக் கணவன் இருந்தும் இல்லாத மாதிரித்தான். ஆகவே, இக்குடும்பமும் ஆண் என்ற பாகத்தை இழந்த குடும்பமாகவே உள்ளது.

இன்னொரு சம்பவம்....

ஒரு பெண் 'சபை' ஒன்றில் இணைந்தார். இன்று அவர் அந்தச் 'சபை'யின் முழுநேர ஊழியர்.

குடும்பத்தின் சமாதானத்துக்கு மருந்து என்ன என்பதைக் காட்ட விழைபவர்.

'கடவுளைக் கண்டேன்' என்று கடவுளின் சாட்சியாகத் தன்னை முன்நிறுத்திக் கொள்பவர்.

ஆனால் அவர் எப்போது 'சபை'க்குள் சென்றாரோ, அப்போதே குடும்பம் பிரிந்தது.

கணவர் ஆலயங்களில்.... மனைவி 'சபை'களிலே....

மதம் குடும்பத்தில் புகுந்து, வாழ்க்கையைக் குப்பையாக்கியதுதான் அவர்கள் கண்ட மிச்சம்.

அவர்களின் குழந்தைகள் தற்போது பெரியவர்களாகிவிட்டனர்.

பலவருடங்களாக தாயின் அரவணைப்பிலிருந்தவர்கள், தற்போது ஒவ்வொருவராகத் தந்தையை நாடிவரத் தொடங்கிவிட்டார்கள்.

'மதங்களும் கடவுள்களும் மக்களை நெறிப்படுத்தி நல்ல மார்க்கத்தைக் காட்டுதற்கே' என்ற வார்த்தையில் மாற்றத்தை ஏற்படுத்தி, மக்களின் அன்றாட வாழ்வை உருக்குலைக்கும்போக்கே புலம்பெயர்ந்த தேசத்தில் மதம்மாறுபவர்கள் மத்தியிலே

பரவலாகக் காணப்படுகிறது.

மதமாற்றங்களும் புதுப்புது விசுவாசங்களும் குடும்பங்களில் நிம்மதியைத் தருவதற்குப் பதிலாக, 'சாத்தான்' என்ற பட்டத்துடன் சாத்வீகத்தைத் துரத்துவதே நான் கண்ட பல அனுபவங்களாகும்.

எந்த ஒரு இனமும் தனக்கென ஒரு வழிமுறையையும் வரையறைகளையும் தமக்கே உரித்தான தனித்தன்மைகளுடன் கொண்டுள்ளது.

சூழ்நிலைகளும் சந்தர்ப்பங்களும் வசதி வாய்ப்புகளும் பெருக, அடிப்படை அறிவு சிறிதுகூட இன்றி 'கண்டதே வாழ்வு, கொண்டதே கோலம்' என்ற போக்கில், மூன்றாமவரின் வார்த்தைகளை எவ்வித ஆராய்ச்சிகளுமின்றி வேதவாக்காக ஏற்று, தமக்குத்தாமே குழறுபடி செய்து, அதே உண்மையான சமாதானமும் நிம்மதியும் எனச் சொல்லி, குடும்ப விரிசல்களுக்கும் பூசல்களுக்கும் காரணமானவர்களை என்னவென்பது?!

ஒரு சினிமா நடிகர் இவர்களுக்காக மேடைக்கு வந்தால், 'அந்தா பார், இவரே விசுவாசத்துள் வந்துவிட்டார்' என்பார்கள். இவர்களுடன் இருந்தவர்கள் திசைமாறிச் சென்றால், 'அந்தா பார், சாத்தானுக்குள் போய் விட்டார்' என்பார்கள்.

இந்த மண்ணுக்கு வருவதற்காக தாயகத்தில் தமது வீட்டிலிருந்து வெளிக்கிடும்போது தமது குல தெய்வங்களை மனதிற்குள் வேண்டிக்கொண்டு பிரயாணத்தை ஆரம்பிக்காதவர்கள் யார்?

அவர்கள் இந்த நாட்டை மிதிக்கவில்லையா?

நலமாக, வசதியாக, முன்னேற்றமாக வாழவில்லையா?!

அப்படியாயின் இந்த விசுவாசத்துக்கான காரணத்துக்கும் காரணம் அந்த 'குல தெய்வங்கள்' என்பதை ஏன் மறந்து, குடும்பப் பிரிவுகளுள் சமாதானத்தையும் கடவுளையும் தேடுகிறார்கள்?!

இதற்கான விடை சிந்தித்துச் செயலாற்றுபவர்களுக்குமட்டுமே புரியும்.

இன்று செய்யக்கூடியவையை நாளைக்கென்று ஒத்தி வைக்காதே. இப்பொழுது என்ன செய்து கொண்டிருக்கிறாயோ, அதைப்பற்றி மட்டுமே நினைக்க வேண்டும்.
தனித்து இருக்கும்போது நண்பரைக் கண்டியுங்கள்.

—சைரஸ்

# பாவரங்கு

## விழித்திருந்தால் கிட்டிடுமோ விடிய ஒரு கைவிசேசம்?

—பீற்றர் குலம்

சித்திரையில் வருகின்ற முத்தமிழே
வருடமாய் ஓடிவருகின்றாய்
வார்த்தைகளால் புது வருசத்தை
வாய்மொழி செய்ய வழி தெரியவில்லை
சிரித்துவாழும் சித்திரை வருசத்தில்
சிந்திய ரத்தம் சிதைந்துவாழும் ஈழத்தில்
விழித்திருந்தால் கிட்டுமோ
விடிய ஒரு கைவிசேசம்?

இரைந்து வரும் விமானமும்
விரைந்து வரும் வேட்டுக்களும்
விலையுயர்ந்த உயிர்களை விதையாக்கிவிட்டன.
வீதியில் ஆமியும் ஆயுதம் தாங்கி
அனைவரும் அங்கும் இங்குமாய்...!

குந்த ஒரு இடமின்றி கூடுகலைந்த குருவிகளாய்
சொந்த நிலமதனில் சோகத்தில் வாழ்வதோ?
அங்கு வெந்து நொந்து வீதியிலே
விம்மியழும் வேளையிதில்
விழித்திழுந்தால் கிட்டுமோ
விடிய ஒரு கைவிசேசம்?

அரையும் குறையுமாய் அவலம் அழிவுகளுள்
அம்மாவென்று அழுது புலம்புகிறது
ஆரத்தழுவி அரவணைக்க
அப் பாலகர்க்கு யாரெவரோ?

படுத்துறங்கப் பாயுமின்றி பயத்துடனே பாம்புகளுள்
எடுத்தியம்ப எவருமின்றி ஏங்கியழும் எந்தனினம்
ஏதிலியாய் ஈழத்திலே.... அவருக்கு
விழித்திருந்தால் கிட்டுமோ
விடிய ஒரு கைவிசேசம்?

வெற்றிலையும் வாயுமாய் முற்சந்தியிலே
அரட்டையடித்த அன்புத் தோழன்
தூக்கம் கலைத்துத் தூக்கினான் துமுக்கியை
விழித்திருந்து விடிவு காண....
காதல் கொண்ட ஈழத்தை இதயத்தில் இருத்தினான்.

புலம்பெயர்ந்த ஜேர்மனியிலே வந்தவொரு இடத்தினிலே
வாழ்விழந்து வதிவிடமின்றி
எல்லைகளைக் கடந்து எங்கேயோ செல்கின்றான்
இன்னொரு தோழன்... சொன்னான்...
விழித்திருந்தால் கிட்டுமாம்
விடிய ஒரு கைவிலங்கு
விடியவந்து விமானத்தில் ஏற்றிடுவார்
வேள்விக்கு வளர்க்கப்படும் வெள்ளாடுகள் நாம்...
வேறுநாடு சென்றிடவே
விடைபெற்றுச் சென்றுவிட்டான்
சித்திரையில் நிம்மதியாய் நித்திரை கொள்வதற்கு
இங்கும் எங்கும் நிம்மதி இல்லையே...
விழித்திருந்தால் கிட்டுமோ
விடிய ஒரு கைவிசேசம்...
என்று கேட்டு ஓடியே போனான்.

❁❁❁

## ஓயாத அலைகள்!

(அன்னை பூபதி நினைவாக....)

**– கைலாயன்**

அப்புவும் ஆச்சியும் ஆண்டாண்டு காலமாய்

எப்பவும் உழைப்பிலே ஏற்றிய எம்வளம்
சக்கையாய் சிதலமாய் துகள்களாய் துவம்சமாய்
சப்பாத்துக் கால்களால் சரிந்து விழுந்தது.

இரத்தமும் சதையுமாய் இனவெறிச் சிங்களம்
எங்களின் மண்ணிலே குடிபுக வந்தன
வருத்தமும் பசியுமாய் உறவுகள் உக்கியே
வழியற்றுக் கொடுமையுள் வாடியே தவித்தன.

அரசியல் ஆசான்கள் அடுக்கிய ஆணைகள்
சிரசினைச் சீண்டியே தமிழனை அலைத்தன
கொடுமையின் கொட்டங்கள் இளைஞரை நசுக்கியே
கொடூரம் கொட்டின: சமாதானம் என்றன.

புத்தமும் ரத்தமும் ஒன்றாய் ஆகின
யுத்தமும் அமைதியாய் வேசமும் காட்டின
மொத்தமாய் தமிழினம் பொலிவற்றுப் போகையில்
மட்டுவில் அம்மையின் குரலொன்று ஒலித்தது.

இளமையைத் தானமாய் மண்ணுக்காய் உவந்துதம்
உயிரையும் வாழ்வையும் விதைக்கவே முன்வரும்
மறவரின் கூட்டத்துள் பூபதி அம்மாவின்
புதுக்குரல் கேட்டுநம் தேசமே சிலிர்த்தது.

நெஞ்சத்து உறுதியில் வெண்ணுடை தரித்தவர்
வஞ்சகர் கொடுமையை எதிர்க்கவே முன்வந்தார்
அஞ்சாத மனவுரம் தாங்கிய அன்னையோ
உண்ணா நோன்பிலே தாங்கினார் மண்ணையே.

அன்னையின் ஆத்மாவின் தாகங்கள் ஓயவில்லை
மண்ணை நினைத்தஅவர் மகிமையும் தேயவில்லை
பூபதி நாமம்கேட்டுப் பொங்கினார் பலமக்கள்
புழுதி தட்டியவர் போர்ப்பறை முழங்கினார்.

ஆயிரம் ஆயிரம் வீரர்கள் தோன்றினர்

அவனியில் தமிழீழம் காணவே வென்றனர்
அலையாக அணியாக வெற்றிகள் குவித்தனர்
தலையாய தலைவனின் நோக்கிலே நிறைந்தனர்.

தினமொரு காவியம் தியாகத்தில் வரைந்தனர்
தீராத தகமாய் வீரத்துள் விளைந்தனர்
மனமொரே மார்க்கமாய் மரணத்தை வென்றனர்
மாவீர ராகியும் மனங்களில் நிறைந்தனர்.

ஓயாத அலையொன்று முல்லையில் முளைத்தது
தேயாத அலையாகத் தீரத்தில் வளர்ந்தது
கிளிநொச்சி அலைரண்டின் கீர்த்தியைச் சொன்னது
இனிஅச்சம் இல்லையென்று தீர்மானம் தந்தது.

கீழ்வான் திசையில் வெள்ளி முளைத்தது
ஊழ்வினை செய்தவர் உருமாறி ஓடினர்
ஓயாத அலைகள் ஒளியினைத் திறந்தது
கைமுனுக் கழுகுகள் கதறியே விலகினர்.

புழுதி அப்பி எம்மைத் தாங்கி
அழுதமண் இன்று கண்ணீர் துடைக்கும்
மேலெழும் ஒளியை நோக்குமெம் விழிகள்
ஆரத் தழுவ விடியல் கிடைக்கும்.

பொழுது புலர்கிறது புதுப்பரணி இசைபாடி
தருணம் தந்ததிந்தப் பூபாள இசையினிலே
அலைகளோ இன்னும் ஓய வில்லை – அவை
தமிழீழம் காணும்மட்டும் ஓய்வ தில்லை.

எங்கள் கரிகாலன் ஏற்றிவைத்த வேள்வியிலே
எங்கும் விடியல் விரைந்து எழுமென்று
சிங்களம் தன்சிந்தை ஏற்றுநிற்கும் காலமொன்று
எதிரில் தெரிகிறது: எழுந்து நடப்போம் நாம்.

# பிறேமன் தமிழ்க்கலை மன்றத்தின் ஏழாவது ஆண்டு நிறைவுக் கலைவிழா. ஒரு பார்வை.

-இரசிகன்

பிறேமன் தமிழ்க்கலை மன்றத்தின் ஏழாவது ஆண்டு நிறைவுக் கலைவிழா 10.07.99 சனிக்கிழமை மாலை 5.00 மணியளவில் பிறேமன் நகரின் "குக்ரிங்" பகுதியில் உள்ள "சாலை இளந்திரையன்" அரங்கில் இனிதே நிகழ்ந்தது.

திருமதி சரோஜினிதேவி நேமிநாதன், திருமதி பெனடிக்ரா ஞானசெல்வம் ஆகியோர் மண்டப வாசல் விளக்குகளையும், மேடையில் உள்ள விளக்குகளை திருமதி வசந்தாதேவி புவனேந்திரன், திருமதி சித்திராதேவி தங்கராசா ஆகியோரும் ஏற்றிவைக்க, தாயகத்தில் உயிர்நீத்த மாவீரர்களுக்கும் மக்களுக்குமான இருநிமிட மௌன அஞ்சலி, மன்ற கீதம் ஆகியவற்றைத் தொடர்ந்து திருமதி சரோஜினிதேவி நேமிநாதனின் வரவேற்புரையுடன் விழா ஆரம்பமாகியது.

ஏற்கெனவே பிறேமன் தமிழ்க்கலை மன்றத்தால் நடாத்தப்பட்ட தமிழார்வப் போட்டிகளில் பங்குபற்றி முதலாவது இடத்தைப் பெற்ற சிறார்களின் மேடையேற்றமும், தமிழார்வப் போட்டிகளில் பங்கேற்று வெற்றியீட்டிய சிறார்களுக்கான பரிசளிப்பும் இடம்பெற்றன. பரிசில்களை இளவாலை அன்ரன் ஜூட் அவர்களும், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட அருட்தந்தை அ.பி. யெயசேகரம் அவர்களும் வழங்கினார்கள். ஹேர்ண கஸ்தூரி சலங்கையொலி நாட்டிய கலாமன்ற மாணவி செல்வி வானிலா கார்த்திகேயன், மேரி ஷாலினி நவரட்ணராஜா, செல்வறோஜன் பூவிலிங்கம், துஷ்யந்தன் ஜெயபாலா, மோகனதாஸ் இராஜன் ஆகியோரது நடனங்கள் பார்வையாளரின் ஏகோபித்த வரவேற்பைப் பெற்றன.

மன்றத் தலைவர் செ.யோகநாதன் அவர்கள் தலைமையுரையில், கடந்த காலங்களில் மன்ற வளர்ச்சிக்காக உழைத்தவர்களை நினைவுகூர, செயலாளர் கொலின் நித்தியேந்திரன் அவர்கள் கடந்த ஆண்டின் மன்ற நிகழ்வுகளை அறிக்கையாக அவையுடன் பகிர்ந்துகொண்டார்.

பிறேமன் தமிழ்க்கலை மன்ற வெளியீடான "கலையோசை" ஏழாவது ஆண்டு மலரின் முதற்பிரதியை மன்றத்தின் முன்னாள் தலைவரான திரு.பூ. நவரட்ணராஜா வெளியிட, "ரஜீதன் ரேடர்ஸ்" உரிமையாளர் திரு. தெய்வேந்திரன் பெற்றுக்கொண்டார்.

நான்கு வயதேயான செல்வன் துதீஸ்வர் பாலசுப்பிரமணியம் என்ற மழலை அழகான தமிழில் தமிழீழ எழுச்சிப் பாடலைப் பாடி அவையோரின் ஏகோபித்த கரகோசத்தையும் பாராட்டையும் பெற்றுக்கொண்டார். அந்த மழலையின் தெளிவான உச்சரிப்பும் நிதானமான வெளிப்படுத்தலும் பலருக்கு வியப்பை ஏற்படுத்தியதில் ஆச்சரியமில்லை.

இளவாலை அன்ரன் ஜூட் தந்த செய்திச்சரமானது மேடைக்கு வித்தி

யாசமான நிகழ்ச்சியாகவும், உலக அரசியல் தலைவர்களின் குணாதிசயங்கள் புலம்பெயர் தமிழரின் சில நிகழ்வுகள் எனப் பலவற்றை நகைச்சுவையுடன் அணுகிச் சென்றது.

பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்ட ஜேர்மன் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத் தலைவரான அருட்தந்தை அ.பி. ஜெயசேகரம் அடிகளார் தனது உரையில், "புலம்பெயர் நாடுகளில் தமிழ் சிறார்களுக்கு தமிழ் கலை பண்பாடு போன்றவற்றிற்கான விளக்கங்கள் சரியாகச் சென்றடைவதில்லை, அது அவர்களைச் சரியான முறையிலும் கவரக் கூடிய முறையிலும் சென்றடைந்தால்தான் எதிர்காலத்திலும் தமிழ் விழுமியங்கள் காப்பாற்றப் படும்" என்னும் கருத்து வெளிப் பட்டது.

செல்வி அபிராமி புவனேந்திரனின் எழுச்சிப் பாடலைத் தொடர்ந்து, "பெண்களின் சுயமுன்னேற்றத்துக்குத் தடையாக இருப்பவர்கள் யார்?" எனும் தலைப்பில் திரு. இ.த. இராஜனின் தலைமையில் திருமதி குணா சிவராஜா, திரு. பீற்றர் குலம், திரு. கொற்றையூர் வாசன், திருமதி நளினி தர்மலிங்கம், திருமதி பெனடிக்ரா ஞானசெல்வம், திரு இராஜன் முருகவேல் ஆகியோர் பங்குபற்றிய உரைப்போர் அரங்கு புதிய கோணத்தில் கருத்துக்களை வித்தியாசமான முறையில் வெளிக்கொணர்ந்து பார்வையாளரைத் தன்வயப்படுத்தியது.

பிறேமன் தமிழ்க்கலை மன்றமானது ஆண்டுதோறும் தமிழ்க் கலைஞர்களைக் கௌரவிப்பது வழக்கம். அதேபோல் இந்த ஆண்டும் ஆறு ஆண்டுகளாக பிறேமன் தமிழர் விளையாட்டுக் கழகத்தின் தலைவராக இருந்து விளையாட்டுத் துறைக்கு ஆற்றிய சேவைக்காக திரு. இரா சுவேந்திரராஜாவும்- எழுத்துத்துறை, கணனித்துறை, தொலைக்காட்சிப் படத் தொகுப்புத்துறை ஆகிய ஆர்வங்களுக்காக திரு. இராஜன் முருகவேலும் கௌரவிக்கப்பட்டனர்.

தொடர்ந்து, பிறேமன் தமிழ்க்கலை மன்ற இளங்கலைஞர்களான மேரி ஷாலினி நவரட்ணராஜா, அரவிந்தன் நவரட்ணராஜா, நிதர்சன் யோகநாதன், அஜீத்தா நேமிநாதன், செல்வறோஜன் பூவிலிங்கம் ஆகியோர் பங்குபற்றி, திரு. பூ.நவரட்ணராஜா தயாரித்து நெறியாள்கை செய்த "சிலம்பு" நாடகமும்- பிறேமன் தமிழ்க்கலை மன்றக் கலைஞர்களான இ.த.இராஜன், பெனடிக்ரா ஞானசெல்வம், டொன்பொஸ்கோ ஞானசெல்வம், செ.யோகநாதன், சுபாகரன், பீற்றர் குலம், இராஜன் முருகவேல் ஆகியோர் பங்கேற்ற "விட்டில்பூச்சி" என்ற நாடகமும் அரங்கேறின. இராஜன் முருகவேலின் சிறுகதையை நாடகவடிவமாக்கி நெறியாண்டார் நாச்சிமார்கோயிலடி இராஜன் அவர்கள். "சிலம்பு" நாடகத்தில் மேரி ஷாலினியின் நடிப்பு பலரது கவனத்தையும் தன்பால் ஈர்த்துப் பாராட்டையும் பெற்றது.

இறுதியாக மன்ற வளர்ச்சிக்கான அதிர்ஸ்டலாபச் சீட்டிழுப்பு இடம்பெற்றது.

இயந்திரமயமான வாழ்க்கையின் மத்தியில் தமது நேரத்தைச் செலவுசெய்த மன்ற அங்கத்தினர்களாலும் கலைஞர்களாலும் பிறேமன் தமிழ்க்கலை மன்றத்தின் ஏழாவது ஆண்டு நிறைவுக் கலைவிழாவானது தமிழ்க் கலைப்படைப்புகள் சிறப்பானமுறையில் அரங்கம் கண்டு, விழா இனிதே நிறைவாகியது என்றால் மிகையில்லை.



# தேடலுள்ள இலக்கிய ஆர்வலர்களே!

**உங்களுக்கோர் புதிய களம் கலையோசை**

**மனச்சிறையில் தவமிருக்கும் சிந்தனைகள்......**
**கற்பனைச் சிறகடித்துப் பறக்கட்டும்**

- கவிதையாய்
- கட்டுரையாய்
- சிறுகதையாய்

**எண்ணங்களை எழுத்தாக்குங்கள்**
**கரம் நீட்டி வரவேற்கிறது கலையோசை**

தொடர்புகளுக்கு:
பிறேமன்
**தமிழ்க்கலை மன்றம்**
Tamilischer Kultur Verein Bremen.e.V
Kalaiosai
**Postfach 660448**
**28244 Bremen**

**Tel.& Fax:0421-579 6195**
**E-Mail: kalaiosai@tamil.com**

*அச்சுப் பதிப்பு: கலையோசை கணனிப் பதிப்பகம் . 0421—5796195*